தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 147 08.01.2026 வியாழக்கிழமை
Chennai Volume: 01 Issue: 147 Thursday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(08-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -24
பிறை: தேய்பிறை
திதி
பஞ்சமி காலை 11.23 வரை
பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
பூரம் மாலை 05.06 வரை
பிறகு உத்திரம்
யோகம்
சித்த/மரண யோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9–10 மணி
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | போட்டி |
| மிதுனம் | ஆக்கம் |
| கடகம் | ஜெயம் |
| சிம்மம் | தாமதம் |
| கன்னி | சிறப்பு |
| துலாம் | ஆதரவு |
| விருச்சிகம் | தனம் |
| தனுசு | நிம்மதி |
| மகரம் | கவனம் |
| கும்பம் | உற்சாகம் |
| மீனம் | பிரீதி |

# உக்ரைன் போருக்குப் பிறகு ரூ.15.18 லட்சம் கோடிக்கு ரஷிய கச்சா எண்ணெய் வாங்கிய இந்தியா!



**புதுடெல்லி,ஜன.8:** உக்ரைன் போர் தொடங்கியதிலிருந்து தள்ளுபடி விலையில் கிடைத்த ரஷிய கச்சா எண்ணெய்யை சுமார் 14,388 கோடி யூரோவிற்கு (இந்திய மதிப்பில் சுமார் ரூ.15.17 லட்சம் கோடி) இந்தியா இறக்குமதி செய்துள்ளதாக ஐரோப்பிய ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய எரிசக்தி மற்றும் தூய்மை காற்றுக்கான ஆராய்ச்சி மையம் (சிஆர்இஏ) வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, ரஷிய எண்ணெய் வாங்குவதில் சர்வதேச அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

உக்ரைன் மீதான முழு அளவிலான தாக்குதலை ரஷியா கடந்த 2022-ஆம் ஆண்டு, பிப்ரவரியில் தொடங்கியது. அப்போது முதல் கடந்த ஜன. 3-ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில், ரஷியாவிடமிருந்து சீனா மொத்தம் 29,370 கோடி யூரோ மதிப்பிலான எரிபொருள்களை வாங்கியுள்ளது. இதில் கச்சா எண்ணெய் கொள்முதல் மதிப்பு மட்டும் 21,030 கோடி யூரோ ஆகும்.

இந்தியா மொத்தம் 16,250 கோடி யூரோ மதிப்பிலான எரிபொருளை கொள்முதல் செய்துள்ளது. இதில் கச்சா எண்ணெய் 14,388 கோடி யூரோவிற்கும், நிலக்கரி 1,818 கோடி யூரோவிற்கும் வாங்கப்பட்டுள்ளன.

பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும், ஐரோப்பிய யூனியன் 21,810 கோடி யூரோவை ரஷிய எரிபொருளுக்காகச் செலவிட்டுள்ளது. 10,630 கோடி யூரோவிற்கு கச்சா எண்ணெயும், 350 கோடி யூரோவிற்கு நிலக்கரியும், 10,820 கோடி யூரோவிற்கு எரிவாயும் வாங்கப்பட்டுள்ளன என்று சிஆர்இஏ தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் எரிபொருள் விற்பனையில் ரஷியா 1 லட்சம் கோடி யூரோ (சுமார் ரூ.105 லட்சம் கோடி) வருவாய் ஈட்டியுள்ளது. இதில் பெரும்பகுதி உக்ரைனில் நடைபெற்று வரும் போருக்குச் செலவிட பயன்படுத்தப்படுவதாக அந்த மையம் கவலை தெரிவித்துள்ளது.

**சரியும் இறக்குமதி:** உக்ரைன் போரைத் தொடர்ந்து, மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக ரஷியா தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் வழங்கியது. இதனால், இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷியாவின் பங்கு 1 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை உயர்ந்தது.

இருப்பினும், ரஷியாவின் 2 முன்னணி எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்த புதிய கட்டுப்பாடுகள் அண்மையில் அமலுக்கு வந்ததன் காரணமாக இந்தியாவின் இறக்குமதி குறையத் தொடங்கியது.

இதன் விளைவாக, ரிலையன்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் ரஷிய எண்ணெய்யைத் தவிர்த்து வருவதால், தற்போதைய பங்கு 25 சதவீதத்துக்கும் கீழாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, ரஷிய எண்ணெய்யைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை ரிலையன்ஸ் நிறுவனம் நிறுத்திவிட்டதாக அறிவித்துள்ளது.

அதேநேரம், இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் அமெரிக்க தடைக்கு உள்ளாகாத ரஷிய நிறுவனங்களிடமிருந்து தொடர்ந்து எண்ணெய் வாங்கி வருகின்றன.

# அமித் ஷா இல்லை அவதூறு ஷா: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு



**திண்டுக்கல்,ஜன.8:** திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று ஒரேநாளில் ரூ.20,387 கோடியில் நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகளை மக்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அர்ப்பணித்துள்ளார். பின்னர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி முதலமைச்சர் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் அவதூறுகளை கூறி உள்ளார் அமித் ஷா.
* அமித்ஷாவுக்கு கடும் கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.
* தமிழ்நாட்டில் இல்லாத பிரச்சனைகளை உருவாக்கி அவதூறுகளை பரப்புகிறார்கள்.
* அமித் ஷாவா இல்லை அவதூறு ஷாவா என நினைக்கும் அளவிற்கு உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறி உள்ளார்.
* இந்துக்களின் உரிமை பறிக்கப்படுவதாக துளியும் உண்மை இல்லாமல் குற்றம்சாட்டுகிறார்.
* உள்துறை அமைச்சர் அமித் ஷா உண்மைக்கு புறம்பாக குற்றம்சாட்டுவது அவரது பதவிக்கு அழகல்ல.
* தமிழகத்தில் கலவரம் செய்துவிடலாம் என்ற எண்ணம் நான் இருக்கும் வரை நடக்காது.
* தமிழ்நாட்டில் மோடி ஆட்சி வேண்டுமா? வேண்டாமா? என்று அமித் ஷா கேட்கிறார்.
* தமிழ்நாட்டை நாம் ஆள வேண்டுமா? டெல்லி ஆள வேண்டுமா? என்பது தான் சவால்.
* அ.தி.மு.க. ஆட்சி அமைந்தால் டெல்லி தான் தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் நிலை ஏற்படும்.
* ஜெயலலிதா மறைந்த பிறகு தமிழகத்தில் இ.பி.எஸ். தலைமையில் பா.ஜ.க. PROXY ஆட்சி நடைபெற்றது.
* தி.மு.க. ஆட்சியில் 4000 கோவில்களில் குடமுழுக்கு நடத்தி இருக்கிறோம்.
* பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இவ்வளவு கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதா?
* உண்மையான பக்தர்கள் தி.மு.க. அரசை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
* மக்கள் எப்போதும் தி.மு.க. அரசின் பக்கம் தான் இருக்கிறார்கள். நாங்கள் தான் மீண்டும் வருவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சூடு பிடிக்கும் தேர்தல் களம்... ஜன. 28-ந்தேதி பிரதமர் மோடி தமிழகம் வருகை?



**சென்னை,ஜன.8:** தமிழக சட்டசபைக்கு இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே, இன்று காலை அ.தி.மு.க- பா.ம.க. இடையே கூட்டணி உறுதியாகி உள்ளது. மேலும் பா.ம.க. ஒதுக்கப்படும் தொகுதிகள் குறித்து பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் மேலும் சில கட்சிகள் கூட்டணியில் இணைவார்கள் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இந்த நிலையில், பிரதமர் மோடி வருகிற 28-ந்தேதி தமிழகம் வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கன்னியாகுமரியில் நடைபெற உள்ள தாமரை மகளிர் மாநாட்டில் பிரதமர் பங்கேற்க உள்ளதாகவும், கூட்டணிக் கட்சி தலைவர்களை ஒரே மேடையில் ஏற்றி உரையாற்ற உள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இரண்டு நாள் பயணமாக தமிழகம் வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதனை தொடர்ந்து கூட்டணியை உறுதி செய்யும் பணிதீவிரமாக நடைபெற்று வருகிறது. பிரதமர் வருகைக்குள் கூட்டணி பேச்சுவார்த்தையை முடிக்க பா.ஜ.க. தீவிர பணியாற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக கூட்டணியில் பாமக இணைந்தது



**சென்னை,ஜன.8:** சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் வீட்டில் இந்த சந்திப்பானது நடைபெற்றது.

அதிமுகவில் ஜெயக்குமார், சி.வி.சண்முகம், பாமகவில் வழக்கறிஞர் பாலு, திலகபாமா ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்பின்னர் எடப்பாடி பழனிசாமி, அன்புமணி இருவரும் கூட்டாக செய்தியாளர்களுடன் பேசினர்.

முதலில் இபிஎஸ் பேசுகையில், "பேரவைத் தேர்தலையொட்டி ஏற்கெனவே அதிமுக - பாஜக கூட்டணி அமைக்கப்பட்டுவிட்டது. தற்போது எங்கள் கூட்டணியில் பாமக இணைந்துள்ளது. அதிமுக, பாஜக, பாமக ஆகிய கட்சிகள் தற்போது கூட்டணியில் உள்ளன. மேலும் சில கட்சிகள் விரைவில் எங்கள் கூட்டணியில் சேருவார்கள்.

இது இயற்கையான கூட்டணி. எங்கள் நிர்வாகிகள், தொண்டர்கள் விரும்பியவாறு நாங்கள் இந்த கூட்டணியை அமைத்துள்ளோம். இரு கட்சியில் உள்ள தலைவர்கள், நிர்வாகிகளின் விருப்பப்படி இந்த கூட்டணி அமைந்துள்ளது.

எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணி. வரும் தேர்தலில் மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற லட்சியத்தின் அடிப்படையில் ஒரு வலிமையான தமிழகத்தை உருவாக்க மக்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொடுக்கின்ற ஒரு அரசாக அமைய எங்களுடைய கூட்டணி உருவாகியுள்ளது.

எங்கள் கூட்டணி வரும் தேர்தலில் 234 தொகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும். அதற்கு கூட்டணி கட்சிகள் இரவு, பகல் பாராமல் உழைத்து சுறுசுறுப்பாக செயல்பட்டு மிகப்பெரிய வெற்றி பெறுவோம். தொகுதிகள் எல்லாம் முடிவு செய்துவிட்டோம். மற்றவை பின்னர் அறிவிப்போம்" என்றார்.


பின்னர் அன்புமணி பேசுகையில், "வரும் பேரவைத் தேர்தலையொட்டி அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இன்று இணைந்துள்ளது. மகிழ்ச்சியான ஒரு தருணம். எங்கள் தொண்டர்கள் எதிர்பார்த்த கூட்டணியில் நாங்கள் சேர்ந்திருக்கிறோம். வலுவான கூட்டணி. எங்கள் நோக்கம் மக்கள் விரோத திமுக ஆட்சி, ஊழல் செய்கின்ற திமுக ஆட்சி, பெண்களுக்கு எதிரான, சமூக நீதிக்கு எதிரான திமுக ஆட்சி, அரசு ஊழியர்கள், மாணவர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள் என அத்துணை உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான ஊழல் ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்திலே அதிமுக தலைமையிலான கூட்டணியில் நாங்கள் இணைந்திருக்கிறோம்.

மிகப்பெரிய வெற்றியை நாங்கள் பார்க்கவிருக்கிறோம். காரணம் சமீபத்தில்கூட 100 நாள்கள் நடைப்பயணம் மேற்கொண்டபோது திமுக மீது மக்கள் மிகுந்த கோபத்தில் இருக்கிறார்கள். கோபம் என்றுகூட சொல்ல முடியாது.

மிகுந்த ஆத்திரத்தில் இருக்கிறார்கள். தேர்தல் எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். உறுதியாக எங்கள் கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்று அதிமுக ஆட்சியமைக்கும்" என்று தெரிவித்தார்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: தி.மு.க. அரசு இந்து எதிர்ப்பு உணர்வை வளர்க்கிறது

## பியூஷ் கோயல் விமர்சனம்



**புதுடெல்லி,ஜன.8:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதலாம் படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் மலையில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபத்திருநாள் அன்று தீபம் ஏற்ற மதுரை ஐகோர்ட்டு தனி நீதிபதி உத்தரவிட்டார். ஆனால், தீபத்தூண் அருகே தர்கா இருப்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என கூறி தீபம் ஏற்ற தமிழக அரசு மறுத்துவிட்டது.

மேலும், தீபத்தூணில் தீபம் ஏற்ற தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மதுரை ஐகோர்ட்டில் இரு நீதிபதிகள் அமர்வில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டு மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது. மேலும், திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற உத்தரவிட்டது.

மேலும், திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கில் மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள், தமிழக அரசின் செயல்பாட்டிற்கு கண்டனங்களை தெரிவித்தனர். அதேசமயம், இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் சுப்ரீம் கோட்டில் மேல்முறையீடு செய்யும் என்று அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திருப்பரங்குன்றம் மலைகளில் தீபம் ஏற்ற அனுமதித்த சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பை எதிர்ப்பதன் மூலம் தி.மு.க. அரசு இந்து எதிர்ப்பு உணர்வை வளர்ப்பதாக மத்திய மந்திரி பியூஷ் கோயல் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது;-

“திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதற்கு மாநில அரசு அனுமதிக்காததால் பக்தர்கள் நீதிக்காக கோர்ட்டை நாடினர். நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீபம் ஏற்றும் நடைமுறையை அனுமதித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நீதிபதியின் உத்தரவை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்தது. இது இந்து விரோத மனநிலையை பிரதிபலிக்கிறது. ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக்கோரி நாடாளுமன்றத்தில் மனு அளித்தனர்.

பிரியங்கா காந்தி, சுப்ரியா சுலே, ஆ.ராசா, தர்மேந்திர யாதவ் உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி உறுப்பினர்கள் அனைவரும் இந்து எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணியில் இருந்தனர். அவர்கள் நீதித்துறையை அச்சுறுத்த முயன்றனர்.

மதுரை ஐகோர்ட்டு கிளை வழங்கிய தீர்ப்பு முருகப்பெருமானின் பக்தர்களுக்கு நீதி வழங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளாக முருகனுக்கு அங்கு விளக்கு ஏற்றி வைக்கப்படுகிறது.

திருப்பரங்குன்றம் மலையில் விளக்கு ஏற்ற அனுமதிக்கும் ஐகோர்ட்டு கிளையின் தீர்ப்பை எதிர்ப்பதன் மூலம் தி.மு.க. அரசு இந்து எதிர்ப்பு உணர்வை வளர்க்கிறது.தேர்தலை கருத்தில் கொண்டு பா.ஜ.க.வும், தேசிய ஜனநாயகக் கூட்டணியும் இந்த பிரச்சினையை எழுப்பவில்லை. இது எங்களுக்கு அரசியல் பிரச்சினை அல்ல.

இது இந்தியாவின் மதச்சார்பற்ற கட்டமைப்பை நிலைநிறுத்துவது மற்றும் இந்தியாவை பிரிக்கும் தி.மு.க. மற்றும் காங்கிரஸின் மனநிலைக்கும் எதிராகப் போராடுவது பற்றியது.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்துக்கு 2.76 டிஎம்சி காவிரி நீர்: கர்நாடகத்துக்கு மேலாண்மை ஆணையம் உத்தரவு

**புதுடெல்லி,ஜன.8:** மாநிலங்களின் கருத்துகளைக் கேட்ட ஆணையம், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு ஜனவரியில் 2.76 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு: எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 47-வது கூட்டத்தில், தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் நீர்வளத்துறை செயலர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு தலைவர் இரா.சுப்பிரமணியன் ஆகியோர் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு உறுப்பினர் ஜெ.ஜெயகாந்தன் பேசுகையில், "ஜன.6-ஆம் தேதி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர் இருப்பு 65.360 டிஎம்சி-ஆக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 8,400 கன அடி நீர் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்காக திறந்துவிடப்படுகிறது’ என்று தெரிவித்தார்.

மேலும், காவிரி டெல்டா மாவட்டங்களில் நவம்பர் மாதம் கடைசி வாரத்திலும் மற்றும் டிசம்பர் மாதம் முதல் வாரத்திலும் டித்வா புயலால் பெய்த கன மழை காரணமாக சுமார் 1 லட்சம் ஏக்கர் பயிர்சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் அப்பகுதிகளில் மறுநடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்கு நீர் தேவைப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

கர்நாடக அணைகளின் நீர் இருப்பைக் கருத்தில் கொண்டு தமிழகத்திற்கு ஜனவரி மாதத்தில் வழங்க வேண்டிய நீரின் அளவான 2.76 டிஎம்சி நீரை உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி கர்நாடகம் பிலுகுண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தைதமிழக உறுப்பினர் வலியுறுத்தினார் என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேடசந்தூர் சவுட முத்து சுவாமிகள் குருபூஜை







**சிவகங்கை, ஜன. 8:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் பகுதியில் ஜீவசமாதி கொண்டுள்ள சித்தர் வேடச்சந்தூர் ஸ்ரீலஸ்ரீ சவுட முத்து சுவாமிகள் ஆவார். சித்தர்கள் வாழ்ந்த கட்டிக் குளம் பூமியில் சுவாமியின் 21ம் ஆண்டு குருபூஜை விழா நடைபெற்றது.

சுவாமிக்கு சிறப்பு யாக பூஜைகள் பதினாறு வகையான அபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது .அதை தொடர்ந்து சிவனடியார்களுக்கு மகேஸ்வரபூஜை ,வஸ்திர தானம் மற்றும் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது . குருபூஜை விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கட்டிக் குளம்சித்தர்கள் குழுவினர், பக்தர்கள் மற்றும் கிராம மக்கள் செய்து இருந்தனர்.

# திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராசு, தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 22 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

# கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம்



இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஒன்றியம் பனைக் குளத்தில் நடைபெற்ற கால்நடை வளர்ப்பு பயிற்ச்சி முகாம்.

# உலகம் உங்கள் கையில்



**கலசப்பாக்கம், ஜன.08:** தமிழக முதல்வர் காணொளி வாயிலாக கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து புதுப்பாளையம் ஒன்றியம் நாகப்பாடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி சரவணன் எம்எல்ஏ 196 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

உடன் ஒன்றிய செயலாளர் சுந்தரபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் மனோகரன், நகர செயலாளர் சீனிவாசன், கல்லூரி முதல்வர் அலமேலு, சுந்தரம், சுதாகர், முனியப்பன், கார்த்திகேயன், சங்கர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

# தமிழ்நாடு அரசுக்கு விழுப்புரம் வட்டார துளுவ வேளாளர் சங்க 14 ஆம் ஆண்டு விழாவில் கோரிக்கை

**விழுப்புரம்,ஜன.08:** துளுவ வேளாளர் இனத்தினை மிகவும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்து, 10.5 % தனி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என

விழுப்புரம் வட்டார துளுவ வேளாளர் சங்க 14 ஆம் ஆண்டு விழாவில் கோரிக்கை,

விழுப்புரம் வட்டார துளுவ வேளாளர் சங்க 14 ஆம் ஆண்டு விழா விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள ASG திருமண மண்டபத்தில் 04-01-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது, வட்டார தலைவர் M. வடிவேல் தலைமை தாங்கினார்.

வட்டார துணைத் தலைவர் ஆ. அருணகிரி, வட்டார இணைச் செயலாளர் A. தமிழ்மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர், வட்டாரச் செயலாளர் ந. சூரியமூர்த்தி வரவேற்புரையாற்றினார்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், விழுப்புரம் மாவட்டத்தின் மூத்த வழக்கறிஞருமான கு.பா. பழனியப்பன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாநில பொதுச் செயலாளர் கல்பட்டு வ.ராதா மறைந்த முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியம் மற்றும் பொருளாளர் பார்த்திபன் ஆகியோர் இருவரின்





உருவப்படங்களை திறந்து வைத்தார்,

மறைந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. துளுவ வேளாளர் இன மக்களை அடையாளம் கண்டு, அவர்களை முழுமையாக ஒருங்கிணைத்து, இன வளர்ச்சிக்கென எதிர்கால திட்டங்களை வகுத்து, அவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி, பொது முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பிற்காக முழு முனைப்போடு செயல்படுவது எனவும், அரசு மேற்கொள்ளும் ஜாதி கணக்கெடுப்பில் துளுவ வேளாளர் இன மக்கள் அனைவரும் வேறுபடுத்தும் மற்ற பெயர்களை குறிப்பிடுவதை தவிர்த்து துளுவ வேளாளர் என்ற ஒரே பெயரை பயன்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வது எனவும், விழுப்புரம் நகரத்தின் மையப் பகுதியில் அல்லது திருச்சி - சென்னை புறவழிச் சாலையில் துளுவ வேளாளர் திருமண மண்டபம் கட்டுவது எனவும்,

துளுவ வேளாளர் திருமண தகவல் மையத்தின் சேவைகளை அனைத்து பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்வது எனவும், அந்தந்த பகுதிகளுக்கென கிளைச் சங்கங்களை உருவாக்கி, மாவட்ட மற்றும் மாநில சங்கத்தினை வலிமை பெறச் செய்வது எனவும்,

பின் தங்கியுள்ள துளுவ வேளாளர்ககளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது எனவும்,

விழுப்புரம் வட்டாரத்தின் சார்பாக சென்னை காமராஜர் அரங்கத்தில் நடைபெற உள்ள 7-வது மாநில மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும்,

தமிழ்நாடு அரசை துளுவ வேளாளர் இனத்தினை மிகவும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்து, 10.5 % தனி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என வலியுறுத்துவது எனவும்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடிகளில் ஒருவரான மு. சண்முக உடையார் அவர்களுக்கு விழுப்புரம் நகரத்தின் முக்கியப் பகுதியில் சிலை வைப்பது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது,

துளுவ வேளாளர் இனத்தினை தனியாக அடையாளப்படுத்தி அரசாணை வெளியிட்டதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது,

இவ்விழாவில் மாநிலப் பொருளாளர் அரங்க. தெய்வமணி, அரசு வழக்கறிஞர் M.S. நடராஜன், புதுவை மாநிலத் தலைவர் மு. மோகன், புதுவை மாநில பொதுச் செயலாளர் இரா. ரவி, கம்பன் கழகத் தலைவர் Ln. G. தனபால், ASG திருமண மண்டப உரிமையாளர் கோபி (எ) கோவிந்தராஜ், ஜோதி மரவாடி உரிமையாளர் N.K.B.செந்தில் குமரன் வழக்கறிஞர்கள் S.சண்முகம், ராமச்சந்திரன் சங்கராபுரம் முன்னாள் தலைவர் P.அழகேசன், சங்க காப்பாளர் கல்பட்டு ப. கல்விராயன், முண்டியம்பாக்கம் Ln L.ராஜவேல், கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர், Ln.MJF. N.நடராஜன், கள்ளக்குறிச்சி மாவட்ட துணைத் தலைவர் G. பாலகிருஷ்ணன், நெய்வேலி சங்கத் தலைவர் G.ராஜகோபால், நெய்வேலி சங்கப் பொருளாளர் S. எழில் வேலவன், சங்கராபுரம் சங்கச் செயலாளர் N.கண்ணன், விழுப்புரம் வட்டார சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள், நன்னாடு N.கலியபெருமாள் வளவனூர் P.ராம்குமார், விழுப்புரம் A.C.குமார், G.V. சத்யநாராயணன், விக்கிரவாண்டி S.ரமேஷ், இணைச் செயலாளர் A.சேகர், முதல் குரல் ஆசிரியர் டாக்டர் கு.பா.ரவீந்திரன் ஆகியோர் உட்பட பலரும் திரளாக கலந்து கொண்டனர்,

# தேவீர அள்ளி அரசுப்பள்ளியில் பெற்றோர்கள் கூட்டம்

**காவேரிப்பட்டினம், ஜன.07:** காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீர அள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் சிவ முத்து லட்சுமணன் தலைமை தாங்கி குழந்தைகள் வீட்டில் படிப்பதற்கு ஏற்ற சூழலை பெற்றோர்கள் உருவாக்க வேண்டும் என்றும் குழந்தைகளுக்கு நல்ல உணவு வழங்கி வீட்டில் தினசரி பாடப்பகுதிகளை படிக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பத்தாம் வகுப்பு பெற்றோர்கள்



என்னுடைய மாணவர்களின் உடைய பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் பெருமக்கள் அவரவர்களுடைய பாடங்களில் மாணவர்களின் உடைய தேர்ச்சி குறித்தும் அவர்கள் எந்தெந்த பகுதிகளில் எவ்வாறு கவனம் செலுத்தி படிக்க வேண்டும் என்பதற்குரிய அறிவுரைகளை வழங்கினர் நிறைவாக பள்ளியின் தமிழாசிரியர் திருமலை நன்றி நவீன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# தேசிய பறவைகள் தினத்தில் 600 மரக்கன்றுகள் நடப்பட்டது

**சிவகங்கை, ஜன.8:** இளையான்குடி சமூகசேவகர் அப்துல் மாலிக் முயற்சியால் தேசிய பறவைகள் தினத்தை முன்னிட்டு சுற்றுப்புறத்தையும் பறவைகளையும் போற்றி பாதுகாக்கும் விதமாக 600 மரக்கன்றுகள் நடப்பட்டது.

பறவைகள் இன்றி அமையாது காடு மனிதர்கள் இல்லாமல் பறவைகள் வாழும் பறவைகள் இல்லாமல் மனிதர்கள் வாழ இயலாது பல காடுகளை உருவாக்கக்கூடிய வல்லமை கொண்ட பறவை இனங்களை வாழ வைப்போம் பறவைகளை பாதுகாப்போம் பறவைகள் தினத்தை கொண்டாடு விதமாக மரக்கன்றுகள் நட்டு சிறப்பித்த இளையான்குடி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் தெரிவித்தார் .

தொடர்ச்சியாக சுற்றுச் சூழலை பாதுகாக்க இடமாக வனவிலங்குகளை பாதுகாக்கும் விதமாக பறவைகளை பாதுகாக்கும் விதமாக நீர் நிலையங்களை பாதுகாக்கும் விதமாக சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் தீர்ப்பை வரவேற்று இளையான்குடி பகுதியில் பாஜகவினர் கொண்டாட்டம்



**மானாமதுரை, ஜன. 8:** திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கு உயர் நீதிமன்ற நீதி அரசர்கள் வழங்கிய தீர்ப்பினை வரவேற்று இளையான்குடி வடக்கு ஒன்றியத்தில் தலைவர் பூபாலன் அவர்கள் தலைமையில் இளையான்குடி புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு இனிப்பு வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய பார்வையாளர் மதிவாணன் சட்டமன்ற அமைப்பாளர் சங்கர சுப்பிரமணியன் இணை அமைப்பாளர் பால கோபாலன் ஒன்றிய பொதுச் செயலாளர்கள் பாலசேகர் சுதாகர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவு வாயில் முன்பு தமிழ்நாடு மாநில அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பாக 500க்கும் மேற்பட்டோர் தமிழக அரசை 7அம்ச கோரிக்கை நிறைவேற்றக்கோரி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்


# ஜல்லிக்கட்டு போட்டிகளை அரசே நடத்த உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு

**மதுரை, ஜன.08:** மதுரை மாவட்டம் அவனியாபுரத்தை சேர்ந்த முருகன் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:-

அவனியாபுரம் கிராமத்தில் தை மாதம் முதல் நாள் (15-ந்தேதி) தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழா நடைபெறும்.

இது கடந்த 100 ஆண்டுக்கும் மேலாக கிராம பொதுமக்கள் சார்பாக நடப்பது வழக்கம். மேலும் கடந்த 2017-ம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த அனுமதி அளித்த பின்னர் கடந்த 2018-ம் ஆண்டு அவனியாபுரம் ஜல்லிக்கட்டு விழாவினை நடத்த தென்கால் கண்மாய் பாசன விவசாயிகள் பிரதான ஜல்லிக்கட்டு சங்கம் என்ற தனிநபர் சங்கத்தினை புதிதாக





உருவாக்கி ஒரு குடும்பத்தைச் சார்ந்த நபர்கள் மட்டும் மேற்படி விழாவினை ஆக்கிரமிப்பு செய்து ஜல்லிக்கட்டு விழாவை நடத்தினார். அதற்கு ஆட்சேபனை தெரிவித்து மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஐகோர்ட் உத்தரவில் மாவட்ட நிர்வாகம் ஜல்லிக்கட்டு விழாவை நடத்தவும் அதில் 16 பேர் கொண்ட ஆலோசனை குழு சேர்த்து நடத்த உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் ஜல்லிக்கட்டு போட்டியை நடத்தி வருகிறது.

எனவே வருகிற 15-ந் தேதியன்று நடைபெறும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு விழாவை நடத்த, அவனியாபுரம் கிராமம் மற்றும் அனைத்து சமுதாய பிரதிநிதிகள் அடங்கிய கிராம பொது கமிட்டிக்கு ஜல்லிக்கட்டு விழாவினை நடத்த அனுமதி வழங்குமாறு மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்தோம். நடவடிக்கை இல்லை.

மாவட்ட நிர்வாகமே ஜல்லிக்கட்டு போட்டி நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது. எனவே அவனியாபுரம் கிராமம் மற்றும் அனைத்து சமுதாய பிரதிநிதிகள் அடங்கிய கிராம பொது கமிட்டிக்கு ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் அமர்வு பிறப்பித்த உத்தரவில் ஜல்லிக்கட்டு போட்டி ஐ.பி.எல். விளையாட்டு கிடையாது. பல்வேறு பிரச்சனைகளுக்கு பிறகு ஜல்லிக்கட்டு போட்டிக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டிகளை சில தனிநபர்கள் நடத்தியதின் காரணமாகவே பல்வேறு பிரச்சனைகள் எழுந்தது. எனவே இதனை அரசு நடத்துவது தான் நல்லது. அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாக்கள் மிகவும் உலகப் புகழ்பெற்றது.

இவ்வாறு உள்ள சூழலில் இந்த விழாக்களை தனி நபர்கள் நடத்துவது பொருத்தமாக இருக்காது. எனவே அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை அரசு நிர்வாகமே நடத்துவது தான் சரியாக இருக்கும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவு பிறப்பித்தனர்.


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹ 999 ONLY


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI


ஆட்கள் தேவை
1.Supervisor
with any post graduate
degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்
தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
Cell : 6382807831


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3 CALENDAR
MANJALMART.COM
RS.100
2026
9337501889
7789941009


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


அதிரடி ஆஃபர்
தவணைமுறை
ரூ. 1,000 முதல்
ரூ. 50,000 வரை
இடம்:- மூலைக்கரைப்பட்டி, இட்டேரி, ரெட்டியார்பட்டி பைபாஸ் அருகில், நான்குநேரி, பத்தமடை, கங்கைகொண்டான்
T. சுமதி
99942 42373
63835 06675


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT: VILAMBARAM.COM CONTACT: 8122798599


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.


RG
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

# கவிதை அரங்கம்!



அடுத்தவர் பார்வையும்
உன் பார்வையும்
ஒன்றாவதில்லை
உன் பார்வையில்
தெளிவாய் இரு

கவலைகள் ஒருபோதும்
வெற்றியைத் தருவதில்லை
முயற்சிகளே

ஓடுவதாக இருந்தால்
துரத்திக்கொண்டு ஓடுங்கள்
வெற்றியை

வெற்றி இறுதியுமல்ல
தோல்வி முடிவுமல்ல
தொடர்வதன் துணிவே
பெரிது

கைக்கு எட்டும்
தொலைவில்
இருக்கும் வெற்றிகூட
எட்டிப்
போய்விடும் உன்
தன்னம்பிக்கைக்கு
நீ சமாதி எழுப்பியிருந்தால்

## வாழ்க்கை தத்துவம்...




நம்ம பின்னாடி
மத்தவங்க பேசுறதல்லாம்
கேட்டுட்டு இருந்தா
வாழ்க்கையில் முன்னாடி
போக முடியாது

தேதி போல
உங்கள் கவலைகளை
தினமும் கிழித்து
எரிந்து விடுங்கள்
ஒவ்வொரு நாளும்
உங்களுக்கானதாக
எண்ணி புதிதாய் வாழுங்கள்

வருவது வரட்டும்
போவது போகட்டும்
என்று இருந்தால் நிம்மதி
நிச்சயம்

# எல்லாமே மாறிப் போச்சு!



நண்பரின் மகள் திருமணத்திற்காக, திருமண மண்டபத்திற்குள் நுழைந்த கதிரேசனை வரவேற்க, அவருடைய நண்பர் வீட்டார் யாரும் வாசலில் நிற்கவில்லை. அப்படியே திகைத்துப் போய் நின்ற கதிரேசன் கோபத்துடன் மண்டபத்திலிருந்து வெளியேற நினைத்தபடி வாசலை நோக்கி நடந்தார்.

அப்போது கதிரேசனின் உறவினர் கந்தசாமியும், இந்த திருமணத்தில் கலந்து கொள்வதற்கு வந்திருந்தார். கதிரேசனைப் பார்த்து மணமக்களை பார்த்து விட்டீர்களா? என்று கேட்க, திருமணத்திற்கு வருகிறவர்களை வரவேற்பதற்கு மணவீட்டார் யாருமே வாசலில் இல்லை. நாம் எதற்காக திருமணத்திற்கு போகவேண்டும் என்று கந்தசாமியை ப் பார்த்து ஆவேசமாக பேசினார்.

சார்... என்னா சொல்றீங்க? மண்டப வாசல்ல வரவேற்கத்தான் மூன்று பெண்கள் நிக்கிறாங்களே! நீங்க பார்க்கலியா? இப்பல்லாம் திருமண மண்டபத்திலே திருமண வீட்டுக்காரங்க யாரும் நின்னு வரவேற்கறதில்லை. வரவேற்பு செய்யறதுக்குன்னு சம்பளத்துக்கு ஆள் வச்சிடறாங்க! அதுபோல சாவு வீட்டுல அழுவதற்குக்கூட கூலிக்கு ஆளுங்கள வச்சுக்கிற நிலை உருவாகிட்டுது!

இது மட்டுமல்ல....கோவில்ல சுவாமியை தூக்கறதுக்கும், சுடுகாட்டுக்கு பிணத்தை கொண்டு போறதுக்குமே கூலி ஆளை தேடற நிலைமை வந்துடுச்சு! அரசியல் கூட்டத்துல கலந்துக்கிறதுக்குக் கூட கூலி கொடுத்து கூட்டம் சேர்க்குற மாதிரி ஆயிடுச்சு!

என்னா பண்றது? மனுசங்க கிட்ட இருந்த பந்தபாசம், உறவு நட்பு எல்லாமே அடியோடு அழிஞ்சு போயிகிட்டிருக்கு! என்று வருத்தமாக பேசினார் கதிரேசன்.

அது ஒரு பக்கம் இருந்தாலும், மனுசங்களுக்கு இப்ப மதிப்பு இல்லாம போயிடுச்சு! எல்லாமே பணமா மாறிப் போச்சு! என்று கவலைப் பட்டுக் கொண்டார் கந்தசாமி....!

தமிழ்ச் செம்மல்
**நன்னிலம் இளங்கோவன்.**

# பாபமும் பலனும்!

கணித ஆசிரியராக இருந்த சந்தானம் மிகத் திறமையானவர். பாடங்களை மிக தெளிவாக நடத்துவார்; கையெழுத்து அழகிய வடிவமாக அச்சிட்டது போல் இருக்கும். பாட வேளை ஆரம்பித்த உடன் வகுப்புக்கு வருவார். முடிந்தவுடன் சென்று விடுவார். நேர மேலாண்மைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பார்.

ஒருமுறை, வகுப்பு கரும்பலகையில் எழுதியிருந்தவற்றை என்னிடம் அழிக்கச் சொன்னார். டஸ்டரால், மேலிருந்து கீழ், கீழ் இருந்து மேல் மற்றும் பக்க வாட்டில் என, முறையில்லாமல் அழிக்க ஆரம்பித்தேன்.

உடனே நிறுத்த சொன்னவர், டஸ்டரை வாங்கி, மேல் இருந்து கீழாக மட்டும் நிதானமாக அழித்தார். அதையும் மென்மையாக கற்பித்தார். பின், 'எந்த செயலையும், ஒழுங்காகவும், நேர்த்தியாகவும், நிதானமாகவும் செய்ய வேண்டும். அப்போது தான் முழு வெற்றிகிடைக்கும். நீ செய்தபடி என்றால், சாக்பீஸ் துகள்கள் மூக்கில் நுழைந்து, உடல் நல பிரச்னை ஏற்பட வாய்ப்பு உண்டு...' என அறிவுரைத்தார்.

அன்று, அது தாக்கம் ஏற்படுத்தவில்லை. ஆனால், பின்னாளில் புரிந்தது. நல்ல வாழ்க்கைப் பாடமாக அமைந்தது.

தற்போது, என் வயது, 69; வாழ்வில் எதையும் நேர்த்தியுடன் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளேன். அந்த ஆசிரியரின் அறிவுரையைப் பின்பற்றி வாழ்கிறேன்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





*"டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே...*

*இதையேன் பெரிசா சொல்றீங்க...?"*

*"அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!"*

# தினம் ஒரு சமையல்



## உருளைக்கிழங்கு சாதம்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| 1. உருளைக்கிழங்கு | -ஒரு கிலோ |
| 2. வெங்காயம் | -4 |
| 3. பச்சை மிளகாய் | -8 |
| 4. அரிசி | -2 கிலோ |
| 5. பட்டை | -5 |
| 6. லவங்கம் | -5 |
| 7. ஏலக்காய் | -5 |
| 8. மஞ்சள் தூள் | -சிறிதளவு |
| 9. இஞ்சி, பூண்டு விழுது | -2 டேபிள்ஸ்பூன் |
| 10. உப்பு | -தேவைகேற்ப |


**செய்முறை:**

1. முதலில் உருளைக்கிழங்கை ஒரு பாத்திரத்தில் போட்டு கொஞ்சம் கெட்டியான அளவுக்கு வேகவைத்து எண்ணையில் போட்டு பொன்முறுவலாக பொரித்து எடுத்து வைத்து கொள்ளவும்.

2. ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம், ஏலக்காய், வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவை சேர்த்து நன்றாக வதக்கவும். இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து பொன்னிறமாக வந்ததும் மஞ்சள் தூள், உப்பு சேர்த்து கலக்கவும். பிறகு, அரிசியை சேர்க்கவும்.

3. தண்ணீர் தேவையான அளவு சேர்த்து சாதம் வேகவிடவும். வெந்தவுடன் பொன்முறுவலாக உருளைக்கிழங்கை போட்டு மூடி வைக்கவும். ஐந்து நிமிடங்கள் கழித்து எடுத்து பரிமாறலாம்.

# நிலாவாரை பயன்கள்



ஆங்கில மருந்து வருவதற்கு முன்பு நம் முன்னோர்கள் உடல் நலத்தை பாதுகாப்பதற்கு பெரும்பாலும் மூலிகைகளை தான் பயன்படுத்தி வந்தார்கள். சில மூலிகைகள் நாம் இருக்கும் இடத்தில் வளர்ந்தாலும் அதை பற்றிய மருத்துவ குணங்கள் நமக்கு தெரிவதில்லை. அப்படி ஒரு மூலிகையில் ஒன்று தான் இந்த நிலாவரை. நிலாவரையின் இலைகள் கசப்பாக இருக்கும் ஆனால் இதில் இருக்கும் மருத்துவ பயன்கள் எண்ணற்றவை. இந்த தொகுப்பில் நிலாவரை பொடி சாப்பிடுவதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகளை தெரிந்து கொள்ளலாம் வாங்க.

நிலாவாரை பொடியில் ஏராளமான ஆரோக்கிய நன்மைகள் நிறைந்து இருக்கிறது. முக்கியமாக உடல் பருமனை குறைக்க உதவுகிறது. எனவே, உடல் எடை அதிககமாக உள்ளவர்கள் நிலாவரை பொடியை எடுத்துக்கொள்வதன் மூலம் உடல் எடையை எளிதில் குறைக்கலாம்.

ஒரு சிலருக்கு சாப்பிட்ட உணவுகள் எளிதில் ஜீரணமடையாமல் வாயு தொல்லை, மலச்சிக்கல், செரிமான கோளாறுகள் ஏற்படும். அதனை சரி செய்வதற்கு நிலாவரை இலையுடன் சிறிதளவு வெந்தய கீரை மற்றும் ஓமத்தை சேர்த்து அரைத்து கொள்ளவும்.

பின்னர் இதை இரவு உறங்குவதற்கு முன்பு சாப்பிட்டு வந்தால் வாயு தொல்லை மற்றும் செரிமானம் சம்மந்தமான அனைத்து பிரச்சனைகளும் சரியாகும்.

உயிரணுக்களின் எண்ணிக்கை வலுவிழந்து இருப்பவர்கள் நிலாவரை பொடியுடன் ஆட்டுப்பால் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தாதுக்கள் பலம் பெரும்.

நிலாவரை பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால், உயிரணுக்கள் அதிகரித்து, ஆற்றல் மேம்படும்.

நம்முடைய உணவு மற்றும் பழக்கவழக்கம் காரணமாக இளம் வயதிலேயே ஒரு சிலருக்கு தலைமுடி வெள்ளையாக மாறிவிடும்.

நிலாவரை இலையை அரைத்து பேஸ்ட் போல செய்து தலையில் தடவி வந்தால் இளநரை விரைவில் சரியாகும். மேலும் முடி உதிர்வதை தடுக்கவும், முடி வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

வயது அதிகமாக அதிகமாக உடலில் பிரச்சனைகளும் அதிகரிக்க ஆரம்பித்து விடும். அதில் முக்கியமான ஒன்று மூட்டு வலி. வாயுக்கள் உடலில் இருந்து வெளியேறாமல் இருப்பதால் தான் கை, கால், மூட்டுகளில் வலி ஏற்படுகிறது.

இதனை குணப்படுத்துவதற்கு வெந்நீரில் நிலாவரை பொடியை சேர்த்து அதில் சிறிதளவு தேன் சேர்த்து குடித்து வரலாம்.

நிலாவரை பொடியை பாலில் கலந்து சுண்டக்காய்ச்சி அதில் பனங்கற்கண்டு சேர்த்து இரவு உறங்கும் முன் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் பிரச்சனை விரைவில் குணமாகும்.

நிலாவரை பொடி பயன்கள்: அதிக வேலை மற்றும் கவலை காரணமாக ஒரு சிலர் எப்பொழுதும் சோர்வுடன் காணப்படுவார்கள்.

உடல் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு நிலாவரை பொடியுடன், சுக்கு, கிராம்பு பொடி மற்றும் ரோஜா இதழ்கள் சேர்த்து 1 லிட்டர் நீரில் கால் லிட்டர் வரும் வரை காய்ச்சி வடிகட்டி குடித்து வரலாம்.

மேலும் இது வயிற்றில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுவதற்கும் உதவியாக இருக்கும்.

## சினிமா

# ஜனநாயகன் படத்தில் விஜய்யுடன் நடிக்க மமிதா பைஜு வாங்கிய சம்பளம்.. எவ்வளவு தெரியுமா



மலையாளத்தில் அறிமுகமாகி ஒட்டுமொத்த தென்னிந்திய ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தவர் நடிகை மமிதா பைஜு. இவர் ரெபல் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார்.

இதை தொடர்ந்து வெளிவந்த Dude படத்திற்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது. இந்த நிலையில், அடுத்ததாக மமிதா பைஜு நடிப்பில் தமிழில் வெளிவரவிருக்கும் படம்தான் ஜனநாயகன். இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து முதல் முறையாக மமிதா நடித்துள்ளார்.

சமீபத்தில் இப்படத்தின் டிரைலர் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றுள்ள நிலையில், படம் வெளிவந்தபின் மமிதாவுக்கு பாராட்டுக்கள் குவியும் என கூறப்படுகிறது. மேலும் இப்படத்தில் அவர் ஆக்ஷன் காட்சிகளில் கூட நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜனநாயகன் படத்தில் நடிப்பதற்காக மமிதா பைஜு வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் நடிக்க மமிதா பைஜு ரூ. 60 லட்சம் சம்பளம் வாங்கியுள்ளாராம்.



நடிகை ஹேமா ராஜ்குமார் சமீபத்தில் துபாய்க்கு சென்று, அங்கு பாலைவனத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:


# நயன்தாரா, கியாரா அத்வானியை தொடர்ந்து யாஷ் உடன் கைகோர்த்த 5-வது நடிகை.. யார் தெரியுமா?

இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில் கே.வி.என் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் டாக்சிக். இப்படத்தில் கன்னட நடிகர் யாஷ் ஹீரோவாக நடிக்கிறார்.

கே.ஜி.எப் 2 வெற்றிக்கு பின் யாஷ் நடிக்கும் படம் என்பதால் பெரும் எதிர்பார்ப்புடன் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். இந்த நிலையில், டாக்சிக் திரைப்படத்தில் நடிக்கும் நடிகைகளின் போஸ்டர்களை தொடர்ந்து படக்குழு வெளியிட்டு வருகிறார்கள்.

ஹுமா குரேஷி, கியாரா அத்வானி, நயன்தாரா, தாரா சுதாரியா ஆகியோரின் போஸ்டர் இதுவரை வெளிவந்த நிலையில், தற்போது நடிகை ருக்மிணி வசந்த் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளனர்.

டாக்சிக் திரைப்படத்தில் நடிகை ருக்மிணி வசந்த், மெல்லிசா (Mellisa) என்கிற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதோ அந்த போஸ்டர்:



# குத்துவிளக்கு உணர்த்தும் ஐந்து குணங்கள்

அன்பு, நிதானம், சமயோசிதம், மன உறுதி, சகிப்புத்தன்மை, இந்த ஐந்து குணங்களும் குத்துவிளக்கேற்றும் பெண்களுக்கு கிடைக்கும். இவ்வைந்து குணங்களும் சேர்ந்து பிரகாசிக்க வேண்டும் என்பது தத்துவம்.

அடிப்பாகம்: குத்து விளக்கின் அடிப்பாகம் மலர்ந்த தாமரைப் பூப்போல அகன்று வட்டமாக இருப்பதால் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரம்மதேவியைக் குறிக்கிறது.

தண்டுப்பாகம்: குத்து விளக்கின் தண்டுப்பாகம் தூணைப்போன்று உயரமாக இருப்பதால் ஓங்கி வளர்ந்து பூமியை ஓரடியாலும் ஆகாயத்தை ஓரடியாலும் அளந்த நெடுமாலாகிய மஹாவிஷ்ணுவைக் குறிக்கின்றது.

அகல் விளக்கு: குத்து விளக்கின் தண்டுக்கு மேலே அகல் போல் நெய் அல்லது எண்ணெய் ஊற்றப்பட்டுள்ள பாகம், சிவனார் கங்கையைச் சடையுள் வைத்திருப்பதுபோல் இருப்பதால் இப்பாகம் உருத்திரனைக் குறிக்கின்றது.

திரியிடும் கண்: குத்து விளக்கின் திரி எரிவதற்குரிய 5 முகங்களும் மஹேஸ்வரனை (பஞ்சமுகன்) குறிக்கின்றது.

மேல்தண்டு: அகலின் மேல் கும்ப கலசம் போல் உள்ள உச்சிபாகம் இருப்பதால் ரூபா ரூபத்திருமேனி உடைய சதாசிவனாய் பாவிக்கதக்கது.

எண்ணெய்: அகல் பாகம் முழுவதும் பரவியுள்ள நெய்யானது





உருவமின்றி எங்கும் பரவி நிற்கும் நாத தத்துவத்தைக் குறிக்கின்றது.

திரி: இந்து தத்துவத்தை அல்லது வெண்மை நிற ஒளியை விளக்குகிறது.

சுடர்: தீப்பிழம்பு இலக்குமிதேவியின் (திருமகள்) சொரூபமாகக் கருதப்படுகிறது.

ஒளி: பிரகாசமாய் இருப்பதால் இது ஞானமயமான சரஸ்வதி தேவியின் சொரூபத்தை குறிக்கின்றது.

சூடு: எரிக்கும் சக்தியானது அழிக்கும் சக்தியாகிய ருத்திராணியின் சொரூபமாகக் கருதப்படுகிறது. வீட்டில் தெய்வீக அருள் நிறைந்திருக்க எல்லாம் வல்ல இறைவனை குத்து விளக்கு ஏற்றி வழிபடுவோம். பகவானின் பரிபூரண அருளை பெறுவோம்.



-எல்.மோகனசுந்தரிகோபி
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்


# சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் வரலாறு

வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றியும், கப்பலோட்டிய தமிழனைப் பற்றியும் முதன்முதலில் வெளி உலகறிய வைத்தவர் ம.பொ.சிவஞானம் (ம.பொ.சி).

வறுமையின் காரணமாக 3-ம் வகுப்பு வரைதான் படித்தார் ம.பொ.சி. 1927-ல் கோப்பாளராக வேலைக்குச் சேர்ந்தார். அங்கே அவர் அறியநேர்ந்த விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் அவருக்குள் சுதந்திர வேள்வியை எழுப்பின. பலமுறை சிறை சென்றார். சிறையில் தமிழ் இலக்கியங்களைக் கற்று, தமிழ்ப் புலமையை மேம்படுத்திக் கொண்டார்.

சிலம்புச் செல்வர்

ம.பொ.சி, தான் எழுதிய 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் நூலை தன் நண்பர் 'தமிழ்நாடு' நாளிதழில் அச்சு அச்சகத்தில் எழுத்து எழுத்தாகக் கோர்த்து அச்சிட்டார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியும், வீரபாண்டிய கட்டபொம்மனும் ம.பொ.சி-யின் எழுத்து மூலமே தமிழ் சமூகத்துக்கு அறிமுகம் ஆனார்கள். 1962-ல் ம.பொ.சி எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலுக்குச் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. இவருடைய 'விடுதலைப் போரில் தமிழகம்' என்னும் நூலே இந்திய விடுதலைப் போரில் தமிழர்கள் ஆற்றிய பங்கை எடுத்துரைத்த முதல் நூல்.



சிலப்பதிகாரத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்கிற வேட்கையில் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினார். சிலம்பின் மேல் இவர் கொண்டிருந்த காதலை அறிந்த ரா.பி.சேதுப்பிள்ளை, நாகர்கோவிலில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் 'சிலம்புச் செல்வர்' என்னும் பட்டத்தை ம.பொ.சிக்கு வழங்கினார்.

தமிழரசுக் கழகம்

1946-ல் 'தமிழரசுக் கழகம்' என்ற இயக்கத்தை ம.பொ.சி தொடங்கினார்.

சென்னை மாகாணத்தில் இருந்து ஆந்திராவைப் பிரித்து, தனி ஆந்திர மாநிலம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்தபோது, சென்னை நகரம் தங்களுக்கு வேண்டும் என்று ஆந்திர மக்கள் கோரினார்கள். 'மதராஸ் மனதே' என்று ஆந்திரர்கள் எழுப்பிய இந்தக் குரலுக்கு, 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று வீர முழக்கம் எழுப்பியவர் ம.பொ.சி. ஒரு கட்டத்தில் சென்னையை பொது தலைநகரமாக ஆக்கலாம், அல்லது இரண்டாகப் பிரிக்கலாம் என்று கூட மத்திய அரசு நினைத்தது. சென்னை நகரின் மீது தமிழர்களுக்கு உள்ள உரிமையை வலியுறுத்தி, அன்றைய மத்திய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரிக்குத் தந்திகள் அனுப்பும் இயக்கத்தை ம.பொ.சி நடத்தினார். இதன் தாக்கத்தால் மத்திய அரசின் முடிவினை மறுபரிசீலனை செய்வதாகவும் சாஸ்திரி உறுதி கூறினார்.

ம.பொ.சியின் கடும் போராட்டத்தை தாங்க முடியாமல் அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜியே அவரை கைது பண்ண வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இறுதியாக ம.பொ.சியின் எண்ணம் போல் சென்னை தமிழ்நாட்டின் தலைநகரானது.

மாநகராட்சி கொடி

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சென்னை மாநகராட்சியின் கொடி, 'கடல், கப்பல், மூன்று சிங்கங்கள், இரண்டு மீன்கள்' கொண்டதாக இருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின் மாநகராட்சியின் கொடிச்சின்னம் மாற்றப்பட வேண்டிய அவசியம் வந்தது. இதற்கான குழுவில் இருந்த ம.பொ.சி தனது தமிழரசு கழகத்தின் கொடியில் இருந்த சேர, சோழ, பாண்டியரின் சின்னமான 'வில், புலி, மீன்' சின்னங்களை சென்னை மாநகராட்சி கொடியிலும் பொறிக்க பரிந்துரைத்தார். இன்றுவரை ம.பொ.சி பரிந்துரைத்த கொடியே சென்னை மாநகராட்சியின் கொடியாக திகழ்கிறது. ம.பொ.சியின் தீவிரமான திருத்தணி எல்லைப் போராட்டத்தின் விளைவாகத்தான், திருப்பதி போன்று திருத்தணியும் ஆந்திரர்களின் ஆளுமைக்குச் சென்றுவிடாமல் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது.

தமிழ்நாடு பெயர் மாற்றம்

சென்னை மாகாணத்துக்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்று முதல் குரல் எழுப்பியவர் ம.பொ.சியே. 29.11.1955-ல் தனது தமிழரசு கழகக் செயற் குழுக் கூட்டத்தில் முதன்முதலில் ம.பொ.சி தான், "தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தை மெட்ராஸ் ஸ்டேட் என்றழைக்கப்படுவதை எதிர்க்கிறோம். தமிழ்நாடு என்று பெயரிடப் பட வேண்டும்" என்று தீர்மானத்தை நிறை வேற்றினார். பொங்கல் திருநாளை தமிழினத்தின் தேசியத் திருநாளாகக் கொண்டாட முதன் முதலில் ஏற்பாடு செய்தவர் ம.பொ.சி. 1946-ம் ஆண்டு ஜனவரி 14-ல் சென்னை கோகலே மண்டபத்தில் முதல் தமிழர் திருநாள் கொண்டாடும் பழக்கத்தைத் தொடங்கி வைத்தவரும் இவரே. இப்படி தமிழ்நாட்டின் வரலாற்றில் முத்திரை பதித்த ம.பொ.சி தமிழக வரலாற்றுப் பக்கங்களில் அழிக்க முடியாத மாமனிதராக விளங்குகிறார்.

# ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் விரைவில் அறிமுகம்

**சண்டிகர், ஜன.8:**

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கடந்த மாதம் அளித்த பதிலில், "நாட்டிலேயே முதல் முறையாக ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் தயாரிப்புப் பணி நடைபெறுகிறது. இந்த ரயில் தயாரான பிறகு சோதனை முறையில் இயக்கப்படும்" என கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஹரியானா அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில், "வடக்கு ரயில்வேயின் லட்சிய திட்டமான ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் தயாரிப்புப் பணி இறுதி கட்டத்தை எட்டி உள்ளது. இந்த ரயில் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இது ஜிந்த் மற்றும் சோனிபட் இடையே சோதனை முறையில் இயக்கப்படும். ஹைட்ரஜன் ரயிலுக்காக ஜிந்த் நகரில் நிறுவப்பட்டுள்ள ஹைட்ரஜன் ஆலைக்கு 11 கேவி சீரான மற்றும் தடையற்ற மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது.

# உ.பி. வரைவு பட்டியலில் 2.89 கோடி வாக்காளர்கள் நீக்கம்

**லக்னோ, ஜன.8:**

லக்னோ: உத்தர பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்குப் பிறகு வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. முன்னதாக அந்த பட்டியலில் 15.44 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில் தற்போது 12.55 கோடி வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். இதன் மூலம் 2.89 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து மாநில தலைமை தேர்தல் அதிகாரி நவதீப் ரின்வா கூறும்போது, "வரைவு வாக்காளர் பட்டியலில் இறப்பு, நிரந்தர இடம்பெயர்வு, பலமுறை பதிவு செய்தல் போன்ற காரணங்களால் 2 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இது, மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 18.7% ஆகும்" என்றார்.

# ஆந்திராவில் ரேஷன் அரிசி கடத்திய 2 பேர் கைது

**புத்தூர், ஜன.8:**

ஆந்திராவில் வெள்ளை ரேஷன் அட்டை வைத்திருக்கும் 1.48 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் தரமான அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் ஆந்திராவின் புத்தூரில் இருந்து ரேணிகுண்டா வழியாக ரேஷன் அரிசி மூட்டைகள் லாரியில் கடத்தப்படுவதாக வடமலை பேட்டை போலீஸாருக்கு ரகசிய தகவல் வந்தது. அதன்பேரில் போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது தமிழகத்தை நோக்கி வேகமாக சென்ற லாரியை மடக்கிப் பிடித்து சோதனையிட்டனர். இதில் லாரியில் 25 டன் ரேஷன் அரிசி மூட்டைகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அரிசி மூட்டைகளுடன் லாரியை போலீஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக திருவள்ளூரை சேர்ந்த லாரி ஓட்டுநர் சதீஷ், அவரது தந்தை மனோகரன் ஆகிய இருவரை போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# சபரிமலையில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்.. தரிசனம் செய்ய 5 முதல் 8 மணி நேரம் வரை காத்திருப்பு

**திருவனந்தபுரம், ஜன.8:**

சபரிமலை வழித்தடங்களில் இதுவரை இல்லாத கூட்டம் காணப்படுகிறது. எரிமேலியில் இருந்து பெருவழிப் பாதை, பம்பை, கணபதி கோவில், மரக்கூட்டம், அப்பாச்சிமேடு, பெரிய நடைப்பந்தல் உள்ளிட்ட பகுதிகளிலும் கட்டுக்கடங்காத கூட்டம் இருந்தது. குறிப்பாக சந்நிதானத்தில் இருந்து மரக்கூட்டம் வரை ஒதுங்கக்கூட இடம் இல்லாத நிலையில் நெரிசல் ஏற்பட்டது.

சபரிமலையில் அலைமோதும் கட்டுக்கடங்காத கூட்டம் காரணமாக பக்தர்கள் 18-ம் படி ஏறி சாமி தரிசனம் செய்ய 5 முதல் 8 மணி நேரம் வரை நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. பக்தர்களின் வருகை அதிகரித்ததை தொடர்ந்து கேரள ஐகோர்ட்டின் உத்தரவை தொடர்ந்து உடனடி தரிசன முன்பதிவு எண்ணிக்கை தினசரி 2 ஆயிரமாக குறைக்கப்பட்டு உள்ளது. ஆனாலும் பக்தர்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் உள்ளது.இதனிடையே சபரிமலை தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் மகர ஜோதியை காண சன்னிதானம், பாண்டித்தாவளம் உள்ளிட்ட இடங்களில் இப்போதே தற்காலிக கூடாரங்கள் அமைத்து ஓய்வு எடுத்து வருகிறார்கள். இதனால் சன்னிதானம், பம்பை, மணப்புரம் போன்ற இடங்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. பம்பையில் பக்தர்கள் கூட்டம் அலை மோதுவதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு உள்ளது. நெரிசலை தவிர்க்க சாமி தரிசனம் முடித்த பக்தர்கள் உடனுக்குடன் மலையிறங்குமாறு திருவிதாங்கூர் தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

# "பாஜக ஐடி விங் உருவாக்கிய செயலிகளை பயன்படுத்தும் தேர்தல் ஆணையம்" - மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

**கொல்கத்தா, ஜன.8:**

கொல்கத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய மம்தா பானர்ஜி கூறியதாவது: "தேர்தல் ஆணையம் வாக்காளர் சரிபார்ப்புப் பணியை நடத்துவதற்காக அனைத்து விதமான தவறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. தகுதியுள்ள வாக்காளர்களை 'இறந்தவர்கள்' என்று குறிப்பதுடன், முதியவர்கள், நோயுற்றவர்களை விசாரணைக்கு வருமாறு கட்டாயப்படுத்துகிறது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இல்லை. இதற்காக அவர்கள் பயன்படுத்தும் செயலிகள், பாஜகவின் ஐடி பிரிவோடு தொடர்புடைய நிறுவனங்களால் உருவாக்கப்பட்டவை என கூறினார்.

# ஆந்திர பேருந்தில் தீ விபத்து: பயணிகளின் நிலை என்ன?

**விசாகப்பட்டினம்,ஜன.8:**



கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கமன் பாலம் சுங்கச்சாவடி அருகே இன்று அதிகாலை விசாகப்பட்டினம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து திடீரென தீப்பற்றியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக காவல்துறை கூறியதாவது,

விசாகப்பட்டினம் நோக்கிச் சென்ற பேருந்து திடீரென தீப்பற்றியது. ஓட்டுநரின் திறமையால் பேருந்து முழுவதுமாக தீப்பற்றாமல் தடுத்து நிறுத்தப்பட்டது. பேருந்திலிருந்த 10-க்கும் மேற்பட்ட பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த தீ விபத்து அதிகாலை 2 மணியளவில் பேருந்து சுங்கச்சாவடியை நெருங்கியபோது ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் யாருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை, உயிரிழப்பு நிகழாமல் தவிர்க்கப்பட்டது.

பேருந்தில் டைனமோவில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டதாக ஓட்டுநர் தெரிவித்தார். சுங்கச்சாவடி அருகே பேருந்து நின்றதும், ஓட்டுநர் எஞ்சினைப் பரிசோதித்தபோதுதீப்பொறிகள் ஏற்பட்டதையடுத்து அவர் உடனடியாக பேருந்தில் இருந்தவர்களை எச்சரித்தார், அவர்கள் விரைவாகக் கீழே இறங்கினர்.

ஓட்டுநரின் விரைவான செயலால் பெரிய விபத்து தடுத்து நிறுத்தப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது. பயணிகளையும் அவர்களது உடைமைகளையும் 10 நிமிடங்களுக்குள் வெளியேற்றினர்.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், அதிகாரிகள் போக்குவரத்தைச் சீரமைத்து, தீ விபத்திற்கான சரியான காரணத்தைக் கண்டறியத் தொழில்நுட்ப ஆய்வைத் தொடங்கினர்.

# காசோலை மோசடி வழக்குகளில் வாட்ஸ்ஆப், மின்னஞ்சலில் சம்மன்

**புதுடெல்லி, ஜன.8:**



காசோலை மோசடி வழக்குகளில் வாட்ஸ்ஆப், மின்னஞ்சல் (இ}மெயில்) மூலமாகவும் அழைப்பாணை (சம்மன்) அனுப்ப உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.


நாடு முழுவதும் காசோலை மோசடி வழக்குகள் பெருமளவில் நிலுவையில் உள்ளன. நீதித் துறைக்குப் பெரும் சுமையாக உள்ள இவ்வழக்குகளில் விசாரணையை விரைவுபடுத்தும் வகையில் வாட்ஸ்ஆப், மின்னஞ்சல் மூலம் அழைப்பாணை அனுப்புதல் உள்பட பல்வேறு புதிய நடைமுறைகளுக்கு அனுமதி வழங்கி உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

அதனடிப்படையில், உத்தரகண்ட் உயர்நீதிமன்றத் தலைமை பதிவாளர் யோகேஷ் குமார் குப்தா ஒரு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது: உத்தரகண்ட் மின்னணு நடைமுறை விதிகள்-2025இன்கீழ், காசோலை மோசடி வழக்குகளில் வழக்கமான வழிமுறையுடன் வாட்ஸ்ஆப் போன்ற கைப்பேசி தகவல் பரிமாற்ற செயலிகள், மின்னஞ்சல் வாயிலாகவும் அழைப்பாணை அனுப்பலாம் என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புகார் பதிவு செய்யும்போது, குற்றஞ்சாட்டப்படும் நபரின் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்ஆப் எண் விவரங்களையும் புகார்தாரர் வழங்க வேண்டும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏழுமலையானின் உண்டியல் காணிக்கையை மேஜை மீது ஏன் எண்ண கூடாது?: ஆந்திர உயர் நீதிமன்றம் கேள்வி

**அமராவதி, ஜன.8:**



திருப்பதி ஏழுமலையானுக்கு தினமும் பக்தர்கள் சராசரியாக ரூ.4 கோடி வரை உண்டியல் மூலம் காணிக்கை செலுத்தி வருகின்றனர். உண்டியல் ஆதாயம் ஆண்டுக்கு சுமார் ரூ.1,500 கோடியாக உள்ளது.


இந்நிலையில், பல ஆண்டுகளாக திருப்பதி தேவஸ்தான சீனியர் உதவியாளராக பணியாற்றி வந்த ரவிக்குமார் எனும் ஊழியர், கடந்த 2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளி நாட்டு கரன்சிகளை திருடியதாக கைது செய்யப்பட்டார். இவரிடம் நடத்திய விசாரணையில், இதுபோல் சுமார் ரூ.100 கோடி வரை திருடி, சொத்து சேர்த்தது தெரியவந்தது.

இதுதொடர்பான வழக்கை தற்போது சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இவ் வழக்கு தொடர்பாக, நேற்று ஆந்திர உயர் நீதி மன்றத்தில் விசாரணை நடைபெற்றது. அப்போது, ஏழுமலையானின் காணிக்கை பணத்தை ஏன் தரையில் உட்கார்ந்தே எண்ண வேண்டும்? மேஜை, நாற்காலி ஏற்பாடுகளை ஏன் திருப்பதி தேவஸ்தானம் செய்ய கூடாது?

மேலும், வேட்டிகளை மட்டுமே ஏன் உடுத்த வேண்டும்? இதற்கென சிறப்பு சீருடையை திருப்பதி தேவஸ்தானம் ஏற்பாடு செய்யலாம் அல்லவா? என்ற கேள்விகளை உயர் நீதிமன்றம் எழுப்பியது. இதற்கு நிர்வாக அதிகாரியிடம் கேட்டறிந்து பதில் அளிப்பதாக தேவஸ்தான தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

# சத்தீஸ்கரில் வெகுமதி அறிவித்து தேடப்பட்ட 26 நக்சல்கள் சரண்!

**புதுடெல்லி, ஜன.8:**



சத்தீஸ்கரின் சுக்மா மாவட்டத்தில் வெகுமதி அறிவித்து தேடப்பட்ட 26 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளதாக மத்த காவல்துறை அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பாக சுக்மா மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கிரண் சவான் கூறுகையில்,

சரணடைந்தவர்களில் ஏழு பெண்கள் உள்பட இந்த நக்சலைட்டுகள், "பூனா மார்கம்" என்ற மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் மூத்த காவல்துறை, சிஆர்பிஎஃப் அதிகாரிகளிடம் சரணடைந்தனர். 26 பேரும் மாவோயிஸ்ட்டுகளின் மக்கள் விடுதலை கொரில்லா ராணுவத்தின் பட்டாலியன், தெற்கு பஸ்தர் பிரிவு, மாட் பிரிவு மற்றும் ஆந்திர ஒடிசா எல்லைப் பிரிவு ஆகியவற்றில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர். மேலும், சத்தீஸ்கரின் அபுஜ்மாத், சுக்மா மற்றும் ஒடிசாவின் எல்லையோரப் பகுதிகளில் நடந்த பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர்.

மாநில அரசின் சரணடைதல் மற்றும் மறுவாழ்வுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டதாக நக்சலைட்டுகள் தெரிவித்தனர்.

சரணடைந்த அனைத்து நக்கல்களுக்கும் தலா ரூ. 50,000 உதவித்தொகை வழங்கப்பட்டது என்றும், அரசின் கொள்கையின்படி அவர்களுக்கு மேலும் மறுவாழ்வு அளிக்கப்படும் என்று அவர் கூறினார்.

தடைசெய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்புடன் தொடர்புடைய அனைவரும் வன்முறையைக் கைவிட வேண்டும் என்று சவான் வேண்டுகோள் விடுத்தார். அவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் கண்ணியமான வாழ்க்கை உறுதி செய்யப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

# ஆஜராகாத அதிகாரிகள்: மத்திய அரசுக்கு பசுமைத் தீர்ப்பாயம் ரூ.1 லட்சம் அபராதம்

**புதுடெல்லி, ஜன.8:**

உத்தர பிரதேசத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டுமான விவகாரத்தில், மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சக அதிகாரிகள் யாரும் தங்கள் முன் ஆஜராகாததற்காக அந்த அமைச்சகத்துக்கு ரூ.1 லட்சம் அபாரதம் விதித்தது தேசிய பசுமைத் தீர்ப்பாயம்.

மேலும், 'மத்திய-மாநில அரசுகளும், அவற்றின் நிர்வாக அமைப்புகளும் சுற்றுச்சூழல் விதிகளுக்கு இணங்க செயல்பட வேண்டிய அரசமைப்புச் சட்ட கடமைகளுக்கு உட்பட்டவை' என்றும் தீர்ப்பாயம் காட்டமாக தெரிவித்தது.

உத்தர பிரதேசத்தின் ஜலான் மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை தொடர்பான விவகாரத்தில், மாநில அரசு, மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் நீர்வள அமைச்சக அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை (ஜன.6) ஆஜராக தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

ஆனால், மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் யாரும் ஆஜராகாததால், தீர்ப்பாயத் தலைவர் நீதிபதி பிரகாஷ் ஸ்ரீவாஸ்தவா, நிபுணர் உறுப்பினர் ஏ.செந்தில் வேல் ஆகியோர் கடும் அதிருப்தி வெளியிட்டனர்.

'மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் யாரும் ஆஜராகாததால், இவ்வழக்கில் விரைந்து தீர்வை எட்டுவதில் வீண் தாமதம் ஏற்பட்டுள்ளது. அபராதம் விதிப்பதன் மூலமே இதுபோன்ற வீண் தாமதம் இனி ஏற்படாமல் தடுக்க முடியும்.

ரூ.1லட்சம் அபராதத்துடன் தனது பதிலை சமர்ப்பிக்கவும், அமைச்சக பிரதிநிதி ஆஜராவதை உறுதி செய்யவும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்துக்கு ஒரு வாய்ப்பு வழங்குகிறோம்.

இந்த அபராதத் தொகை, வழக்குரைஞர்களை நியமிக்க இயலாத புகார்தாரர்களின் சட்ட செலவுகளுக்கும், புகார்தாரர்களுக்கு தேவையான பிற வசதிகளை ஏற்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்' என்று தீர்ப்பாயம் அறிவுறுத்தியது.

# அயோத்தி ராமர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள துணை கோயில்களில் பிப்ரவரி முதல் தரிசனம்

**புதுடெல்லி, ஜன.8:**

உத்தரபிரதேசத்தின் புனித நகரமான அயோத்தியில் ராமர் கோயில் புதிதாக கட்டப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி நிறைவை குறிக்கும் வகையில் கொடியேற்றும் விழா நடைபெற்றது.

இந்நிலையில் இந்த கோயில் வளாகத்தில் உள்ள 15 துணை கோயில்களுக்கான பொது மக்கள் தரிசனம் பிப்ரவரியில் தொடங்க உள்ளது. இதற்கான முடிவு ஸ்ரீ ராம ஜென்மபூமி அறக்கட்டளையின் நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இதுகுறித்து அறக்கட்டளையின் தலைவர் நிருபேந்திர மிஸ்ரா மேலும் கூறியதாவது: ராமர் கோயில் வளாகத்துக்குள் அனுமதிச் சீட்டுடன் மட்டுமே தரிசனம் செய்ய முடியும். இதற்காக ஒரு செயலி உருவாக்கப்படுகிறது. இம்மாத இறுதிக்குள் அது தயாராகிவிடும். பிறகு பிப்ரவரி முதல் வாரத்தில் துணை கோயில்களில் தரிசன வசதி தொடங்கப்பட வாய்ப்புள்ளது. ராமர் கோயிலுக்கு அன்றாடம் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இதை மனதில் கொண்டு, அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராம் மருத்துவமனையில் மருத்துவ வசதிகளை மேம்படுத்தி வருகிறோம். 300 படுக்கைகள் கொண்ட சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மேலும் புற்றுநோய் சிறப்பு மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகளும் விரைவில் தொடங்கி 2 ஆண்டுகளில் முடிவடையும். இந்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரலில் சர்வதேச ராம் கதா அருங்காட்சியகம் பொதுமக்களுக்கு திறக்கப்படும். இதில் ஏற்கெனவே நான்கு டிஜிட்டல் கேலரிகள் கட்டப்பட்டுள்ளன. .இவ்வாறு அவர் கூறினார்.

# ஆதார் கார்டு பிளாஸ்டிக் அட்டைக்கான கட்டணம் திடீர் அதிகரிப்பு

**புதுடெல்லி, ஜன.8:**

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) இணையதளத்தில் விண்ணப்பித்து இந்த பிவிசி ஆதார் அட்டையை வாங்கிக் கொள்ள முடியும்.

ஆதார் கார்டு என்பது தற்போது தவிர்க்க முடியாத அடையாள ஆவணமாக உள்ளது. பள்ளி அட்மிஷன் முதல் வங்கி கணக்கு வரை அனைத்திற்கும் பிரதானமாக ஆதார் எண்ணே கேட்கப்படுகிறது. 12 இலக்கங்கள் கொண்ட இந்த ஆதார் அட்டையை செல்லும் இடமெல்லாம் எடுத்து செல்ல ஏதுவாக, பிவிசி (PVC) எனப்படும் பிளாஸ்டிக் ஆதார் அட்டையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) இணையதளத்தில் விண்ணப்பித்து இந்த பிவிசி ஆதார் அட்டையை வாங்கிக் கொள்ள முடியும். இதற்கான கட்டணம் இதுவரை 50 ரூபாயாக இருந்தது. இந்நிலையில், கடந்த 1-ஆம் தேதி முதல் அந்த கட்டணத்தை உயர்த்தி இந்திய தனித்துவ அடையாள ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, புதிய ஆதார் அட்டை பெற விண்ணப்பிப்போர் இனி 75 ரூபாய் கட்டணமாக செலுத்த வேண்டியிருக்கும். வரி மற்றும் டெலிவரி கட்டணம் ஆகிய இரண்டும் இந்த 75 ரூபாய் கட்டணத்தில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020-ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல்முறையாக பிளாஸ்டிக் ஆதார் பெறுவதற்கான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இ-ஆதார், பேப்பர் ஆதார் போலவே பிளாஸ்டிக் ஆதாரும் செல்லத்தக்க ஆவணமாகவே கருதப்படுகிறது.

ஆதார் ஆணையத்தின் இணையதளத்தில் பிவிசி ஆதாருக்கு விண்ணப்பித்தால், 5 பணி நாட்களுக்குள் விண்ணப்பதாரர்களின் முகவரிக்கே ஸ்பீடு போஸ்ட்டில் அனுப்பப்படும்.

# ஜெர்மனி அதிபர் 2 நாள் பயணமாக இந்தியா வருகை

**புதுடெல்லி, ஜன.8:**



இந்தியாவுக்கான தனது முதல் பயணத்தின் போது, மெர்ஸ் அகமதாபாத் மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களுக்குச் செல்கிறார்.

ஜெர்மனி அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ், அடுத்த வாரம் 2 நாள் பயணமாக இந்தியா வருகை தர உள்ளார். வர்த்தகம், முதலீடு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயணத்தை அவர் மேற்கொள்வதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பயணம் ஜெர்மனி அதிபர் மெர்சின் முதல் பயணம் என்றும், அவரை 12-ந் தேதி ஆமதாபாத்தில் பிரதமர் மோடி வரவேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூருக்கும் அவர் பயணம் மேற்கொள்ள இருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# ஆன்லைனில் விவசாயியிடம் ரூ.42 லட்சம் மோசடி

## மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு

**ஈரோடு, ஜன.08:** ஈரோடு மாவட்டம் செம்பூத்தாம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி (44 வயது) ஒருவர், வாட்ஸ்அப் மூலம் தன்னை தொடர்பு கொண்ட பெண் ஒருவரின் ஆலோசனையின் பேரில், போலி பங்குச்சந்தை செயலியை பதிவிறக்கம் செய்துள்ளார். அதன் மூலம் தனக்கு பெரும் லாபம் கிடைக்கும் என நம்பி, அவர் சேமித்து வைத்திருந்த ரூ.42.25 லட்சத்தை முதலீடு செய்துள்ளார்.

பின்னர் அவர் அந்த பணத்தை எடுக்க முயன்றபோது அந்த செயலி முடக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்த புகாரின்பேரில் ஈரோடு சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து சைபர் பண மோசடியில் ஈடுபட்ட மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# ஐ.டி. பெண் ஊழியரிடம் பாலியல் அத்துமீறல்: ஜார்க்கண்ட் இளைஞர் கைது



**சென்னை, ஜன.08:** காருக்காக அதிகாலையில் சாலையில் காத்திருந்த ஐ.டி. பெண் ஊழியரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட ஜார்க்கண்ட் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். திருச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் பெண் ஒருவர் சென்னையில் தங்கி, கீழ்ப்பாக்கம் பர்னபி சாலையில் உள்ள தனியார் ஐ.டி. நிறுவனம் ஒன்றில் பணி செய்துவருகிறார்.

இவர் புத்தாண்டைக் கொண்டாட சொந்த ஊர் சென்றுவிட்டு நேற்று முன்தினம் அதிகாலை சென்னை திரும்பினார். புரசைவாக்கம் தாசபிரகாஷ் பகுதிக்கு வந்த அவர், அங்கிருந்து தான் தங்கியிருக்கும் இடத்துக்கு செல்ல செயலி மூலம் கார் புக் செய்து காத்திருந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த இளைஞர் ஒருவர், அந்த ஊழியரின் அருகே சென்று பேச்சுக் கொடுத்தார். பின்னர் திடீரென அவர் மீது பாய்ந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டார்.

இதை சற்றும் எதிர்பாராத ஐ.டி. ஊழியர் அதிர்ச்சியில் கூச்சலிட்டார். அலறல் சத்தம் கேட்டு அந்த வழியாகச் சென்றவர்கள், பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட இளைஞரைப் பிடித்து தாக்கினர்.

கீழே விழுந்து கை உடைந்தது: பின்னர், இதுகுறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, கீழ்ப்பாக்கம் போலீஸார் சம்பவ இடம் விரைந்து அந்த இளைஞரை கைது செய்து காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

விசாரணையில், பிடிபட்ட இளைஞர் ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பிரமோத் யாதவ் (35) என்பதும், கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனிப்பு கடை ஒன்றில் மாஸ்டராக பணி செய்து வருவதும் தெரியவந்தது.

விசாரணையின் இடையில் பிரமோத் யாதவ், கழிப்பறை செல்லும்போது கீழே விழுந்ததால் கை உடைந்தது. பின்னர் அவரை போலீஸார் சிறையில் அடைத்தனர்.

# மதுவுக்கு அடிமையான கணவரால் பிரச்சினை: 2 குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து தாய் தற்கொலை



**வருசநாடு, ஜன.08:** மதுவுக்கு அடிமையான கணவரால் விரக்தியடைந்த பெண், தனது 2 குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டார். தேனி மாவட்டம் வருசநாடு அருகேயுள்ள தண்டியன்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயபெருமாள் (40). தொழிலாளி. இவரது மனைவி தனலட்சுமி, குழந்தைகள் தேவா (7), நீதி (2).

ஜெயபெருமாள் மதுப் பழக்கத்துக்கு அடிமையாகி, தினமும் குடித்து விட்டு வீட்டில் தகராறு செய்துள்ளார். குடும்பச் செலவுக்கும் பணம் தராததால் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மது குடித்துவிட்டு வந்ததால், குடும்பத்தில் பிரச்சினை அதிகரித்தது. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான தனலட்சுமி நேற்று அதிகாலை தனது 2 குழந்தைகளுடன், ஒரு விவசாயக் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

அவர்களது உடல்கள் கிணற்றில் மிதப்பதைக் கண்ட அப்பகுதி மக்கள், வருசநாடு காவல் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து வந்த போலீஸார், தீயணைப்புத் துறையினர் உதவியுடன் 3 பேரின் உடல்களை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# கோவையில் போதை ஸ்டாம்புகள் விற்ற 5 பேர் கைது



**கோயம்புத்தூர், ஜன.08:** கோவை சரவணம்பட்டி பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கே சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த 3 பேரை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர்கள் கணபதி பகுதியை சேர்ந்த ரேவந்த்(எ) அபி (வயது 23), ரத்தினபுரியைச் சேர்ந்த பெலிக்ஸ்பிரதீப்(25), வடவள்ளியைச் சேர்ந்த பிரதீஷ்(20) என்பதும், அவர்கள் பெங்களூரில் இருந்து கடத்தி வந்து கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை குறிவைத்து போதை ஸ்டாம்புகளை விற்று வந்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் கொடுத்த தகவலின்பேரில் வர்ஷத்குமார்(22), ஹரிபிரசாத்(21) ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# குன்னூரில் உறைபனி தீவிரம்: அதிகாலையில் கடுங்குளிரால் பொதுமக்கள் தவிப்பு



**குன்னூர், ஜன.08:** நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் டிசம்பர்-ஜனவரி மாதங்கள் உறை பனிப்பொழிவு காலம் என்பதால் அங்கு நேற்று முதல் கடும் உறைபனி கொட்டி தீர்த்து வருகிறது.

அதிலும் குறிப்பாக குன்னூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உறைபனிப்பொழிவின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது.

இதன்காரணமாக அங்குள்ள புல்வெளிகள் மற்றும் நீர்நிலை பகுதிகளில் பச்சைக் கம்பளத்தில் முத்துக்கள் கொட்டியது போல உறைபனி படர்ந்து இருந்தது. சாலையோரம் நின்றிருந்த வாகனங்கள் மீதும் உறை பனி படலத்தை பார்க்க முடிந்தது.

மேலும் குன்னூரில் பயிரிடப்பட்டுள்ள கேரட், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் மீது வெள்ளைக்கம்பளம் போத்தியது போல் உறைப்பனி படர்ந்து காணப்படுகிறது. பனியின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் அங்குள்ள தேயிலை செடிகள் மற்றும் மேராக்காய் பந்தல்கள் கருகும் அபாயம் ஏற்பட்டு உள்ளதால் அப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இதற்கிடையே குன்னூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான கொலக்கம்பை, சேலாஸ், கரும்பாலம், சின்ன கரும்பாலம், ஜிம்கானா, குன்னகம்பை உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேர வெப்பநிலை 0 டிகிரி செல்சியஸ் அளவிற்கு குறைந்து காணப்பட்டது.

இதனால் அங்குள்ள பகுதிகளில் அதிகாலை நேரங்களில் கடுங்குளிர் நிலவி வருகிறது.

எனவே அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் போர்வை, சால்வை உள்ளிட்டவற்றை போர்த்திக் கொண்டு நடமாடி வருகின்றனர்.

மேலும் அதிகாலை நேரங்களில் வேலைக்கு செல்லும் தோட்டத்தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் ஆகியோர் கடுங்குளிரால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

# திருப்பூர் அருகே ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த கோவில் இடித்து அகற்றம்

## பொதுமக்கள் எதிர்ப்பு–போலீஸ் குவிப்பு



**திருப்பூர், ஜன.08:** திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே உள்ள ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ராக்கியாப்பட்டி பகுதியில் 2.8 ஏக்கர் பரப்பளவில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. இதனை ஆக்கிரமித்து குமரன் குன்று என்ற பெயரில் முருகர், விநாயகர், சிவலிங்கம், நந்தி உள்ளிட்ட சன்னதிகள் கொண்ட செல்வமுத்து குமாரசாமி கோவில் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள இந்த கோவிலை அவிநாசி தாசில்தார் சந்திரசேகர், டி.எஸ்.பி., சிவகுமார் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புடன் பொக்லைன் எந்திரம் மூலம் இன்று காலை இடித்து அகற்றும் பணி நடைபெற்றது.

இதையறிந்த இந்து முன்னணியினர் மற்றும் அப்பகுதியை சேர்ந்த பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கோவிலை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


பெண்கள் பலர் இடிக்க வேண்டாமென கண்ணீர் வடித்தனர். இதனால் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாதவாறு இருக்க அங்கு ஏராளமான போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர்.

பின்னர் போலீசார், பொதுமக்களை வளாகத்தை விட்டு அப்புறப்படுத்தினர். அப்போது போலீசார்-பொதுமக்களிடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த ஆக்கிரமிப்பு குறித்து அப்பகுதியை சேர்ந்த யுவராஜ் என்பவர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இடம் வருவாய் துறைக்கு சொந்தமானது என கடந்த 2010-ம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவிலை அகற்ற வருவாய் துறையினர் நடவடிக்கை மேற்கொண்ட போது, இரு தரப்பினர் இடையே பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இந்நிலையில் இன்று ஆக்கிரமித்து கட்டப்பட்டு இருந்த கோவிலை வருவாய்த்துறையினர்-போலீசார் பாதுகாப்புடன் அகற்றி உள்ளனர்.

# மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை மக்களின் கவனத்திற்கு... குடிநீர் வாரியம் வெளியிட்ட முக்கிய அறிவிப்பு



**சென்னை, ஜன.08:** சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மந்தைவெளி ராமகிருஷ்ணா மடம் சாலையில் எம்.ஆர்.சி.நகர் குடிநீர் பகிர்மான நிலையத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குடிநீர் குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. எனவே, நாளை (வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) காலை 10 மணி வரை எம்.ஆர்.சி. நகர் குடிநீர் பகிர்மான நிலையம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை, மயிலாப்பூர், சாந்தோம், நந்தனம், ராஜா அண்ணாமலை புரம், மந்தைவெளி ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் நிறுத்தப்படுகிறது. பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு நீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் HTTPS;//CMWSSB.TN.GOV.IN என்ற இணையதள முகவரியில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். குடிநீர் தொட்டிகள், தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் வழக்கம்போல நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 50 அடிக்கு கீழ் சரிந்த வைகை அணை நீர்மட்டம்



**கூடலூர், ஜன.08:** தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகில் உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணையில் இருந்து மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு குடிநீர், பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுகிறது. பருவமழை கைகொடுத்ததால் வைகை அணையின் நீர்மட்டம் கடந்த அக்டோபர் மாதம் 70 அடியை தாண்டி முழு கொள்ளளவை எட்டியது.

இதனால் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்ட பாசனத்திற்காக அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. கூடுதல் தண்ணீர் திறப்பாலும், அதன்பின் மழை குறைந்ததாலும் அணையின் நீர்மட்டம் வேகமாக சரியத் தொடங்கியது. இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 49.54 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 680 கனஅடியாக உள்ள நிலையில் பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டு மதுரை, திருமங்கலம், சேடபட்டி குடிநீர் திட்டங்களுக்காக மட்டும் 69 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 1933 மி.கனஅடியாக உள்ளது. இதேபோல் முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 131.55 அடியாக உள்ளது. வரத்து 341 கனஅடி, திறப்பு 1000 கனஅடி, இருப்பு 5060 மி.கனஅடி. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் மீண்டும் முழு கொள்ளளவை எட்டி 126.28 அடியில் உள்ளது. அணைக்கு வரும் 3 கனஅடி நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 100 மி.கனஅடியாக உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 50.90 அடியாகவும், சண்முகாநதி அணை நீர்மட்டம் 34 அடியாகவும் உள்ளது.

மாவட்டத்தில் மழை குறைந்துள்ள நிலையில் கடும் பனிப்பொழிவே நிலவி வருகிறது.

# காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானதால் புதுக்கோட்டை மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை



**அறந்தாங்கி, ஜன.08:** தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதியானது தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக மறியுள்ளது. பின்னர் அதுவே தாழ்வு மண்டலமாக வலுவடைந்து அடுத்த 72 முதல் 90 மணி நேரத்தில் மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு நகரும்போது, இலங்கை மற்றும் தமிழகத்தின் கடலோர பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்றும், அந்த இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி வருகிற 9-ந்தேதி முதல் 11-ந்தேதி வரை டெல்டா மற்றும் உள்மாவட்டங்களிலும் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

அதன் எதிரொலியாக கடலோர மாவட்டங்களில் மீனவர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டுமாவடி முதல் முத்துக்குடா வரை 32 மீனவ கிராமங்கள் மற்றும் 2 மீன்பிடித்துறை முகங்கள் உள்ளன. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள், 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும் கடலுக்கு சென்று வருகின்றன.

இதனை நம்பி சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகிறார்கள். இந்நிலையில் கடலில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீன் வளத்துறை சார்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

மீன்வளத்துறையின் அறிவிப்பை தொடர்ந்து மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லாமல், விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகளை கடற்கரை ஓரத்தில் நிறுத்தி வைத்துள்ளனர். ஏற்கனவே கடந்த மாதம் அடுத்தடுத்து உருவான புயல் சின்னங்களால் மீன்பிடி தொழில் முழுவதுமாக முடங்கியது. இந்த நிலையில் தற்போது காற்றின் வேகம் மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்ற அறிவிப்பால் மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தி உள்ளனர்.

# மாதாந்திர பராமரிப்பு பணி: திருநெல்வேலியில் இன்று மின்தடை

**திருநெல்வேலி, ஜன.08:** வள்ளியூர் கோட்ட செயற்பொறியாளர் வளன்அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தில், வள்ளியூர் கோட்டத்திற்கு உட்பட்ட கோட்டைகருங்குளம் மற்றும் கூடன்குளம் துணை மின் நிலையங்களில் நாளை (8.1.2026, வியாழக்கிழமை) மின்வாரிய மாதாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்சொன்ன துணை மின் நிலையங்களில் மின்விநியோகம் தடை செய்யப்படும். எனவே பின்வரும் ஊர்கள் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் மின்விநியோகம் இருக்காது.

காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை:

கோட்டைகருங்குளம், குமாரபுரம், வாழைதோட்டம், சீலாத்திகுளம், முடவன்குளம், தெற்குகள்ளிகுளம், சமூகரெங்கபுரம், திருவெம்பலாபுரம்.

கூடங்குளம், இடிந்தகரை, இருக்கன்துறை, பொன்னார்குளம், விஜயாபதி, ஆவுடையாள்புரம், தோமையார்புரம், சங்கனேரி, வைராவிகிணறு, தாமஸ்மண்டபம் ஆகிய இடங்களில் மின்தடை செய்யப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கவர்னரிடம் இருந்து பட்டம் பெற மறுத்த மாணவிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

**மதுரை, ஜன.08:** திருச்செந்தூரைச் சேர்ந்த வக்கீல் ராம்குமார் ஆதித்தன், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:- நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 32-வது பட்டமளிப்பு விழா 13.8.2025 அன்று நடந்தது. அந்த விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி பங்கேற்று மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அப்போது அவரிடம் இருந்து ஆராய்ச்சி மாணவி ஜீன் ஜோசப் என்பவர் பட்டத்தை பெற மறுத்து, துணைவேந்தரிடம் பெற்றுக் கொண்டார்.

சட்டப்படி, வேந்தர் தான் பல்கலைக்கழகத்தின் தலைவர் ஆவார். வேந்தர் இல்லாத போது மட்டுமே துணைவேந்தர் மாணவர்களுக்கு பட்டம் வழங்க முடியும். எனவே வேந்தரிடம் பட்டம் பெற மறுத்தது சட்டவிதி மீறல். மேலும் அந்த மாணவி பட்டமளிப்பு விழாவின் போது அரங்கத்தில் செய்தியாளர்களை சந்தித்து அரசியல் கருத்துகளை தெரிவித்தார். அப்போது தமிழ்நாட்டிற்கு ஒன்றும் செய்யாத கவர்னரிடம் நான் ஏன் பட்டம் பெற வேண்டும் என மாணவி கூறி இருக்கிறார்.

பட்டமளிப்பு விழா அரசியல் போராட்டத்திற்கான களம் அல்ல. மாணவி துணை வேந்தரிடம் இருந்து பெற்ற பட்டம் செல்லத்தக்கது அல்ல. எனவே அதனை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். மேலும் மாணவியிடம் இருந்து பட்டத்தை திரும்ப பெற வேண்டும். பல்கலைக்கழக விதிகளை மீறி மாணவிக்கு பட்டம் வழங்கிய துணைவேந்தர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# காவல்துறை வாகனங்களை எஸ்.பி. சிலம்பரசன் ஆய்வு




**தூத்துக்குடி, ஜன.08:** தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் நேற்று மாவட்ட காவல்துறை அலுவலக மைதானத்தில் வைத்து மாவட்ட காவல்துறையின் 31 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 135 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.


அப்போது அவர் வாகன ஓட்டுநர்களிடம் வாகனங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை கேட்டறிந்து சீர் செய்யுமாறும், சீட் பெல்ட் அணிந்து நான்கு சக்கர வாகனத்தையும், ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனத்தையும் இயக்குமாறு உத்தரவிட்டதோடு, வாகனங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்.

## நூல் வெளியீட்டு விழா

தஞ்சாவூர், அண்ணா நூற்றாண்டு அரங்கத்தில் வருகிற (10.01.2026) சனிக்கிழமை மாலை 6:30 மணியளவில் திருமிகு க. அன்பழகன் அவர்கள் தலைவர், (அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், தஞ்சாவூர் மாவட்டம்) தலைமையுரையற்ற, திருமிகு சிவகுரு நடராஜன் அவர்கள் வரவேற்புரை வழங்க பேராசிரியர். கோ.விஜயராமலிங்கம் அவர்கள் எழுதிய காந்தித் தடம் நூலினை வெளியிட்டு விழாப் பேருரை திருமிகு இறையன்பு அவர்கள் வழங்க, நூலினைப் பெற்றுக்கொண்டு உரை முனைவர் அ. அண்ணாமலை இயக்குநர், (தேசிய காந்தி அருங்காட்சியகம், புதுடில்லி,) திருமிகு த. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் தலைவர், (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்) கருத்துரை வழங்க, எழுத்தாளர் பாவண்ணன் நூல் அறிமுகவுரை நிகழ்த்த, ஏற்புரை நூலாசிரியர் பேராசிரியர் கோ. விஜயராமலிங்கம் அவர்கள் நிகழ்த்த, நிகழ்ச்சியை நெறியாள்கை செய்கிறார் மருத்துவர் ச. மருதுதுரை, நிகழ்ச்சி இனிதே நடைபெற உள்ளது. அனைவரும் வருக! நிகழ்ச்சி ஏற்பாடுகளை தஞ்சை நல்லூர் முற்றம் செய்து வருகின்றனர்.





## மார்கழி மாதம் சங்கடஹர சதுர்த்தி வழிபாடு.....





திருவண்ணாமலை மாவட்டம் ஜனவரி 6 கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ விநாயகருக்கு மார்கழி மாத சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பால்,தயிர், பன்னீர், இளநீர், தேன், விபூதி, பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், அருகம்புல் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க மகாதீபாரதனையும் நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ விநாயகர் பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு அருகில் வளையாம்பட்டு கிராமத்தில் உள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி விழா சிறப்பாக கொண்டாட பட்டது. ஊர் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு விநாயகரை வணங்கி சென்றனர்.

## கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் கலெக்டர் ஆய்வு

*தூத்துக்குடி, ஜன.08:* *தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சை பகுதி, அதிநவீன சிகிச்சை பகுதி, மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பகுதி, வெளி நோயாளிகள் பிரிவில் பாதம் பாதுகாப்பு மையம், பல் மருத்துவ பகுதி, மக்களை தேடி மருத்துவம், வெளி நோயாளிகள் பிரிவு, ரத்த வங்கி, எலும்பு முறிவு பகுதி, பொது மருத்துவம், கதிரியக்கப் பிரிவு, டிஜிட்டல் எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் பகுதி, மெமோகிராம் ஆகியவற்றை தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் புதிதாக கட்டுமான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் 50 படுக்கை வசதிகளுடன் கூடிய Critical care Block-ஐயும் ஆய்வு செய்தார்.*

*தொடர்ந்து கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு Asiaforms Pvt.Ltd மூலம் ரூ.50 ஆயிரம் மதிப்பிலான Lighting Board Asiaforms பெறப்பட்டது. அதற்கான நன்றி கடிதத்தை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, கோவில்பட்டியின் சார்பாக மாவட்ட கலெக்டர் Asiaforms அலுவலரிடம் வழங்கினார்.*

*இந்த ஆய்வில் இணை இயக்குனர் (நலப்பணிகள்) பிரியதர்ஷினி, மருத்துவமனை கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன், உறைவிட மருத்துவ அலுவலர் (பொறுப்பு) அனுஜா ஜஸ்டின், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை I, செவிலியர் கண்காணிப்பாளர் நிலை II மற்றும் செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

## திருவம்பாவை ஊர்வலம்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்கழி மாத 23-ஆம் நாள் திருவம்பாவை ஊர்வலம்.



சேடபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சர்வதேச வேட்டி தினம் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் பாலமுருகன் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியை பரமேஸ்வரி முன்னிலை வகித்தார். தமிழர்களின் பாரம்பரிய உடையின் சிறப்பு,சிறுதானிய உணவுகள் சார்ந்த விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. வேட்டி அணிந்து வந்த மாணவர்களுக்கு திருக்குறள் புத்தகம், தினமலர் மாணவர் பதிப்பு பட்டம் இதழ் இனிப்பு, பிஸ்கட் உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டன. தமிழர்களின் பாரம்பரிய உள்விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஏற்பாடுகளை ஆசிரியர் ராமு செய்திருந்தார். தமிழ்நாட்டில் ஜனவரி 1 முதல் 7 வரை வேட்டி வாரமாக கடைபிடிக்கப்படுகிறது. 2016ஆம் ஆண்டு முதல் ஜனவரி 6ஆம் தேதி வேட்டி தினமாக கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்கள் விமலா, ரமாபிரபா, புவனேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம்மாவட்டதலைவர்திருமதி கவிதா வெங்கடேசன் தலைமையில் போளூர் பஸ் நிலையத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பாக திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றலாம் என மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியதை கொண்டாடும் விதத்தில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

## தமுமுகவிற்கு ரத்ததான சேவை பாராட்டு சான்றிதழ் அரசு மருத்துவமனை வழங்கப்பட்டது



தேசிய தன்னார்வலர் இரத்த தான நாளை முன்னிட்டு கோவை அரசு மருத்துவமனையில் அதிகப்படியாக இரத்ததானம் செய்த தன்னார்வு இயக்கங்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மருத்துவ மேற்பார்வையாளர் அவர்கள் தலைமையில் இன்று கோவை அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. இதில் கடந்த ஆண்டில் இரத்ததான முகாம்கள் மூலம் கோவை அரசு மருத்துவமனையில் இரத்ததானம் செய்த தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழக மருத்துவ சேவை அணிக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கப்பட்டது இதில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மாவட்ட தலைவர் சர்புதீன், மாவட்ட செயலாளர் முஜிபுர் ரஹ்மான், மாவட்ட பொருளாளர் சிராஜ்தீன், ஊடகப் பிரிவு செயலாளர் பைசல், சுற்றுச்சூழல் அணி செயலாளர் இப்ராஹிம், மனிதநேய வணிகர் சங்க பொருளாளர் செரீப் ஆகியோர் கலந்து பாராட்டு சான்றிதழைப் பெற்றனர்



திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர் முன்னாள் யூனியன் சேர்மன் ஜீவா மூர்த்தி கணவர் மூர்த்தியின் முதலாமாண்டு நினைவேந்தல் மற்றும் சிலை திறப்பு விழா சிறப்பு அழைப்பாளராக அதிமுக மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அக்ரி எஸ் எஸ் கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ பங்கேற்று சிலையை திறந்து வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார். உடன் அதிமுக ஒன்றிய செயலாளர் வெள்ளையன், ஜீவாமூர்த்தி, மணிகண்டன், சுகன்யா உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகளும் பொதுமக்களும் பலர் பங்கேற்றனர்.




## கே.என்.நேரு மீதான ரூ.1,020 கோடி முறைகேடு புகாரில் எப்.ஐ.ஆர் பதிவு செய்யக்கோரி அதிமுக வழக்கு




**சென்னை, ஜன.08:** அமைச்சர் கே.என்.நேருவுக்கு எதிராக அமலாக்கத்துறை எழுதிய கடிதத்தின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக்கோரி மாநிலங்களவை அதிமுக உறுப்பினர் ஐ.எஸ்.இன்பதுரை சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

திமுக அமைச்சர் கே.என். நேரு ரூ. 1,020 கோடி வரை ஊழல் செய்ததாகக் குற்றம்சாட்டி, வழக்குப்பதிவு செய்யக் கோரி அமலாக்கத்துறை தமிழக டிஜிபிக்கு கடிதம் அனுப்பியது. வழக்குப்பதிவு செய்யக்கோரி இரண்டு முறை அமலாக்கத்துறை கடிதம் அனுப்பியுள்ளது. அமலாக்கத்துறை அனுப்பிய ஆதாரங்களின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்யுமாறு அதிமுக எம்.பி. இன்பதுரை, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறைக்கு ஏற்கனவே புகார் அளித்திருந்தார். இந்த நிலையில், அமலாக்கத்துறை புகாரை அடிப்படையாக வைத்து உடனடியாக அமைச்சர் நேரு மீது வழக்குப் பதிவு செய்யுமாறு லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக் கோரி இன்பதுரை, சென்னை ஐகோர்ட்டில் மனு ஒன்றை இன்று தாக்கல் செய்துள்ளார்.

அதில், ஊழல் எப்படி நிகழ்ந்தது என்பது தொடர்பாக அமலாக்கத்துறை தெளிவாக கூறியுள்ளதாகவும் இதனடிப்படையில் வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென கடந்த மாதம் 13-ஆம் தேதி புகாரளித்தும் லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்யவில்லை என மனுவில் குற்றம்சாட்டியுள்ளார். எனவே, அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்குப் பதிவு செய்து நியாயமான முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணை நடத்தி முடிக்க உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## தனியார் பஸ்களை வாடகைக்கு இயக்கும் முடிவை கைவிட வேண்டும் – அன்புமணி



**சென்னை, ஜன.08:** பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் விடுமுறைக்காலங்களில் வெளியூர் செல்லும் பயணிகளின் தேவையை சமாளிப்பதற்காக மட்டும் இதுவரை தனியார் பஸ்கள் வாடகைக்கு எடுத்து இயக்கப்பட்டு வந்த நிலையில், இனி எல்லாக் காலங்களிலும், சென்னை உள்ளிட்ட தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களிலும் தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்க திமுக அரசு தீர்மானித்திருக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களை தனியாருக்குத் தாரை வார்க்கும் நோக்கம் கொண்ட திமுக அரசின் இந்த பிற்போக்கானத் திட்டம் கடுமையாக கண்டிக்கத்தக்கது.


தீபாவளி திருநாள் போன்ற விழாக்காலங்களில் சொந்த ஊர் செல்ல விரும்பும் மக்களின் வசதிக்காக தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்கும் திட்டத்தை கடந்த ஆண்டில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நடைமுறைப்படுத்தின. தவிர்க்க முடியாத தருணங்களில் மட்டும் தனியார் பஸ்கள் வாடகைக்கு எடுத்து இயக்கப்படும், அதற்காக தனியார் பஸ்களுக்கு கி.மீக்கு ரூ.51.25 வீதம் வாடகை வழங்கப்படும் என்றும் போக்குவரத்துத்துறை அறிவித்திருந்தது.

இப்போது அடுத்தக்கட்டமாக அனைத்து வழித்தடங்களிலும், அனைத்துக் காலங்களிலும் தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்க முடிவு செய்துள்ள திமுக அரசு, இதற்காக 1989-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின் 288 ஏ பிரிவை திருத்த தீர்மானித்துள்ளது. இதுதொடர்பாக இன்று ஜனவரி 7-ஆம் தேதி வரை பொதுமக்கள் கருத்துகளை கேட்கவிருக்கும் திமுக அரசு, அதன்பின்னர் தனியார் பஸ்களை அனைத்து வழித்தடங்களிலும் வாடகைக்கு எடுத்து இயக்க முடிவு செய்திருக்கிறது. இது மிகவும் ஆபத்தானது ஆகும்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் அரசுப் போக்குவரத்துக்கழகங்கள் வாயிலாக இயக்கப்பட்டு வந்த பஸ்களின் எண்ணிக்கை 20,944-லிருந்து 20,508 ஆக குறைந்துவிட்டது. அதேபோல், பணியாளர்களின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்து 26,089 என்ற அளவிலிருந்து ஒரு லட்சத்து 7 ஆயிரமாக குறைந்து விட்டது. இப்படியாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களை திட்டமிட்டு சீரழித்து வரும் திமுக அரசு, போக்குவரத்துக் கழகங்களை தனியார் மயமாக்குவதன் அடுத்தக்கட்டமாகவே அனைத்து வழித்தடங்களிலும் தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்கத் துடிக்கிறது. மிகவும் ஆபத்தான இந்த திட்டத்தை அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த முறை பொங்கல் கொண்டாடிய போது ஏன் ரூ.3000 கொடுக்கவில்லை?– சீமான் கேள்வி



**ஈரோடு, ஜன.08:** கடந்த ஆண்டு நடைபெற்ற ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நடத்தை விதிகளை மீறியதாக சீமான் மீது 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்கின் விசாரணைக்காக சீமான் இன்று ஈரோடு நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைக்கு பிறகு இவ்வழக்கு தொடர்பாக மார்ச் மாதம் 9-ந்தேதி சீமான் மீண்டும் ஆஜராக நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்பின், நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த சீமான், அதிமுக-பாமக கூட்டணி என்பது எதிர்பார்த்த ஒன்றுதான் என்று கூறினார். செய்தியாளர்கள் சந்திப்பில் சீமான் மேலும் கூறியதாவது:-

* திமுக- அதிமுக மாறிமாறி ஊழல் குற்றச்சாட்டுகளை வைத்து கொடுந்துயரம்.

* மாறிமாறி ஊழல் குற்றச்சாட்டுகளை கூறுவது வழக்கமான வேடிக்கை தான்.

* அதிமுக- பாமக கூட்டணி என்பது எதிர்பார்த்த ஒன்றுதான்.

* கடந்த முறை பொங்கல் கொண்டாடிய போது ஏன் ரூ.3000 கொடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com